விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆவணி 14 ஜுலைகஜ் 2 இதழ் 197
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 30-8-84

## சுவிஷ் தமிழ் இளைஞர் நிலை: இவ்வாரம் தெரியவரும்!

### இலங்கை வந்து திரும்பிய குழு அறிக்கை

பேர்ண், ஆக. 29 சுவிற்சர்லாந்திலுள்ள சுமார் 1500 இலங்கைத்தமிழ் இளைஞர்களின் எதிர்காலத்தைத் நிர்ணயிக்கப்போவதாக கருதப்படும் அறிக்கை இவ்வாரம் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குச் சென்று அங்குளள நிலைமைகள் குறித்து ஆராய்ந்த குழுவின் அறிக்கை ஒன்று நேற்று வெளியிடப்பட்டது இங்குள்ள இலங்கையர்களை என்ன செய்வது என்பது குறித்து இந்தக் குழுவின் சிபார்சு அறிக்கை இவ்வாரம் வெளியிடப்படும் என்று நேற்றைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வந்த சுவிஸ் பொலிஸ் இயக்குனரும் அகதிகள் பிரிவுத் தலைவருமான திரு. பீற்றர் ஹேஷ், திரு. வர்ஷா போர்ன் ஆகியோர் தமது 8 நாள் விஜயம்குறித்துஅறிக்கையொன்றை இங்கு வெளியிட்டனர்.

தமிழ் மக்களின் பிரச்னை அங்கு பெரும் பிரச்னையாக

(8ம் பக்கம் பார்க்)

# இனப் பிரச்னையால் தமிழர் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறதா?

### சர்வகட்சி மாநாடு சனியன்று மீண்டும் கூடும்

(கொழும்பு)

சர்வகட்சி மாநாடு நேற்று மாலை மீண்டும் கூடிய போது அதிகாரப் பரவலாக்கல்

[8 ம் பக்கம் பார்க்க]

## இலங்கை வந்துள்ள சுவீடன் எம். பி.க்கள் குழு அக்கறை

(இ. கந்தசாமி)

**இலங்கை இனப் பிரச்னையினால் தமிழ் மக்களின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிவதில் இலங்கை வந்துள்ள சுவீடன் பாராளுமன்றக் குழு அக்கறைகாட்டி வருவதாகத் தெரிகிறது.**

**இதேவேளை இனப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படுவதன் மூலம் அமைதியை ஏற்படுத்தவேண்டுமென்ற சுவீடனின் கருத்தையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு வலியுறுத்தி வருவதாகவும் தெரிகிறது.**

சுவீடன் சோஷலிஸ ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த திரு. ஸ்ரிகா லேமர் தலைமையில் இங்கு வந்துள்ள பத்துப்பேர் கொண்ட வெளிநாட்டு உதவிகள் தொடர்பான பாராளுமன்றக் குழுவினர் நேற்று வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி. டாக்டர் நீலன் திருச்செல்வத்தைச் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படுவது குறித்தும் கூட்டணியின் நிலை குறித்

(8ம் பக்கம் பார்க்க)

## "நாட்டின் இறைமையைவிட மனித உயிர்களே பெறுமதியானவை"

### இலங்கை சம்பவம் குறித்து ஜனதா தலைவர்

(புதுடில்லி)

''இலங்கை ஒரு இறைமையுள்ள நாடு என்பதால் வேறு நாடுகள் அங்கு நடப்பவை பற்றி விவாதிக்கக்கூடாது என்று தர்மசீலர்கள் கூறும் ஆலோசனையையிட்டு இந்தியா கவலைகொள்ளத் தேவையில்லை நாடுகளின் இறைமையைவிட மனித உயிர்களே பெறுமதிமிக்கவை''

இவ்வாறு ஜனதாக்கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. மதுதண்டவதே இந்திய லோக சபையில் கூறினார்.

''இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படும்போது எமது பாணியில் எதிர்க்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

## நீதிமன்ற அலுவலகத்தில் கொள்ளை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதிமன்ற அலுவலகத்தின் பாதுகாப்பான அறையொன்று உடைக்கப்பட்டு இரும்புப்பெட்டி உட்பட முக்கிய தஸ்தாவேஜுகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு இக்

[8-ம் பக்கம் பார்க்க]

### காலி 'பூசா' முகாமிலுள்ள

## தமிழ் இளைஞர்கள் பெற்றோருடன் கடிதம்மூலம் தொடர்புகொள்ள ஏற்பாடு

### முதல் கடிதங்கள் இன்று வரலாம்

(யாழ்ப்பாணம்)

காலி 'பூசா' தடைமுகாமில் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் தத்தம் பெற்றோருடன் கடிதமூலம் தொடர்பு கொள்ள அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியை யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலாளரும். அரசாங்க அதிபருமான திரு.எம். பஞ்சலிங்கம் சென்ற செவ்வாய்க்கிழமை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியை அவரது அலுவலகத்தில் சந்தித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பாதுகாப்புப் படையினரால் ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி தொடக்கம் கைதுசெய்யப்

[8-ம் பக்கம் பார்க்க]

## "பொலிசாரினுல் அனுப்பப்பட்டவை மனிதஎலும்புகளே'

### சட்ட வைத்திய அதிகாரி சாட்சியம்

[அலுவலக நிருபர்]

''யாழ். பொலிசாரினுல் எனதுபரிசோதனைக்காக அனுப்பப்பட்ட எலும்புகள் மனித எலும்புகளே'' என்று யாழ். சட்ட வைத்திய அதிகாரி பேராசிரியர் என்.சரவணபவானந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கக் கட்டிடத்தின் எரிந்த இடிபாடுகளுக்குள் கண்டெடுத்த

(8ம் பக்கம் பார்க்க)

## குருநகர் மக்கள் வங்கி இன்று முதல் செயல்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வங்கிகளுக்குப் பதிலாக வாடிக்கையாளர் நலன் கருதி பணக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்கு, குருநகரிலுள்ள பெருந் தெருக்கள் திணைக்களத்துக்குச் சொந்தமான ஒரு கட்டிடம் ஒன்று இன்று தொடக்கம் இயங்கவுள்ளது.

குருநகர் இராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள பெருந் தெருக்கள் திணைக்களப் பொறியியலாளரின் விடுதியிலேயே மக்கள் வங்கி நிலையம்

[8-ம் பக்கம் பார்க்க]

## கரணவாய் தெற்கு வழமைக்குத் திரும்புகிறது

(கொழும்புத்துறை)

கரணவாய் வெடிகுண்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து பீதியினல் இடம் பெயர்ந்த கரணவாய் தெற்கு வாசிகள்

(8-ம் பக்கம் பார்க்க)

**தனியார் பஸ் வண்டி திணைக்களம்**

Act No. 44 of 1983

**தனியார் பஸ்வண்டி உரிமையாளர்கட்கு**

**யாழ் மாவட்டத்தில் உள்ள தனியார் பஸ் வண்டிகள் யாவும் தட்டிவான்களும் உட்பட 5 – 9 – 84க்கு முன்னதாக யாழ் மாவட்ட தனியார் பேருந்து இயக்குனர் சங்கத்தின் கீழ்**

தங்களையும் ஒரு அங்கத்தவர்களாக பதிவு செய்து சேவையில் ஈடுபடுத்தும்படி அறியத்தருகின்றேன். இவ்வளவு காலமும் சிறு சிறு சங்கங்களாக இயங்கி வந்த சங்கங்கள் கலைக்கப்பட வேண்டும் என்பதையும் அறியத்தருவதுடன் அச் சங்கங்களில் இயங்கி வந்த **பஸ் வண்டிகள், தொழிலாளர்கள் பற்றிய விபரங்களையும்** இச்சங்கத்திற்கு சமர்ப்பித்து சல பாதைகளிலும் **தனியார் பஸ் சேவைகள் ஒழுங்கு முறையுடன் நடைபெறுவதற்கு** ஒத்துழைப்பு நல்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

முக்கிய குறிப்பு:

இதுவரை காலமும் பாவித்து வந்த சம்பவத் தாள்கள், பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களும் யாழ் மாவட்ட தனியார் பேருந்து இயக்குனர் சங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும்

தலைவர்,

**யாழ் மாவட்ட தனியார் பேருந்து இயக்குனர் சங்கம்.**

(1503)

# ...ரி விளம்பரம்

## விற்பனைக்கு

நாயர்மார்கட்டுக்கு அருகில் 2 பரப்பு வீடு கட்டக் கூடிய தென்னங் காணி விற்பனைக் குண்டு. தொடர்பு: Dr. K. வாசவன், 14, இராணி வீதி, நல்லூர். 1468

எமது ஸ்தாபனத்தில் பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்ட விலையில் இரு Honda Motor Cycles C B125N, C 70 Econo Power விற்பனைக்குண்டு. C B 125 N தொடரிலக்கம் 86 Sri 8000 C 70 Econs Power தொடரிலக்கம் 86 Sri 4000 அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். Agromac Ltd, மலஸ்கன் லிமிட்டெட்டுக்கு பக்கத்தில், 37/3, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1499

குறைந்த காலம் பாவித்த நல்லநிலையில் உள்ள 2½' உயரம் 1½' சதுரம் சைட்கதவு Electrolux Freezer Made in England. சிறிய காப்பென்டர் தொழிற்சாலைக்கு உகந்த ரேல்வாள். 710 Watt ரில்லர் 500 Watt பிளேனர், (சீவுளி கூடு) 700 Watt வளைவு கட்டிங் 350 Watt யாவும் A E G மொடல் எலக்ரோனிக் Made in German. உடன் விற்பனைக்குண்டு. உமா ஸ்டோர்ஸ், 213, கண்டிரோட், அரியாலை. தபால் கட்டைசந்தி. 1487

## தேவை

நன்கு அனுபவமுள்ள வெல்டிங் கம்மாலை வேலை செய்யக் கூடியவர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். நேரில் தொடர்பு கொள்ளவும், கமலா கராஜ் அன் இன்டஸ்ரீஸ், 53, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 1469

## தவறிவிட்டது

எனது மோட்டார் சைக்கிள் இல: 88 ஸ்ரீ 528 ரைக்ஸ், இன்சூரன்ஸ் பத்திரங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்து கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். விபரங்களுக்கு: சு. செல்வராஜன், 126, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 1496

## வெற்றுச் சாக்கு விற்பனை

இச்சங்கத்தில் 15,000 வெற்றுச் சாக்குகள் விற்பனை செய்வதற்குக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் யாவும் பதிவுத் தபாலில் இடதுபக்கமேல்மூலையில் 'சாக்கு விற்பனை' எனக் குறிப்பிட்டு 10-9-84ம் திகதி நண்பகல் 12-00மணிக்கு முன்பாக தலைவர், கரைதுறைப் பற்று ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு, என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்துடன் ரூபா 250/- மீளப்பெறக்கூடிய வைப்பும் செய்யப்படல் வேண்டும்தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் கேள்விகிடைத்து மூன்று நாட்களுக்குள் பொருளைச் சங்க வளவில் இருந்து அப்புறப்படுத்துதல்வேண்டும். காரியாலய நாட்களில் வெற்றுச் சாக்கினை சங்கத்தில் பார்வையிடலாம். சங்கத்தில் ரூபா 15/-கட்டி கேள்விப் பத்திர படிவங்கள் பெற்று பனுப்பண்ணவேண்டும். சங்கப் படிவங்களல்லாதவற்றில் வரும் கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

தலைவர்,
கரைதுறைப்பற்று
ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு.
24-8-84. 1464

---

படித்தீர்களா?
ரஜனி
மாதநாவல் இதழ்

விற்பனையாகிறது!
கே. டானியலின்
**"பூ மரங்கள்"**
தனிப்பிரதி ரூ. 4-90
ரஜனி பப்ளிகேஷன்ஸ்
248/5. கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
1491

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

சாவகச்சேரி, கண்டிவீதி, குருபவனத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகமணி அருமைநாயகம் என்பவரின் மரண சாதனமில்லா சொத்துக்கள் விடயத்தில்.

— மரணமெய்தியவர்
மரணசாதன நியாயாதிக்கம் } வழக்கு இலக்கம் 223/T

அருமைநாயகம் கைம்பெண் தங்கேஸ்வரி. "குருபவனம்" கண்டி வீதி, சாவகச்சேரி.

— மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26-ந் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர். 1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 17-ந் திகதி,

நீதிமன்றக்கட்டளைப்படி,
ஆ. குணநாயகம்
பதிவாளர்.

தயாரித்தவர்கள்,
பரராஜசிங்கமும்
அம்பிகைபாலனும்,
மனுதாரின் சட்டத்தரணிகள்.
1480

---

# நல்லூர் உற்சவத்தில் இம்முறை அசம்பாவிதங்கள் ஏதுமில்லை!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் போது இம்முறை எவ்வித அசம்பாவிதங்களோ திருட்டு சம்பவங்களோ இடம் பெறவில்லை.

உள்வீதியிலும், வெளிவீதியிலும், பக்தர்கள் தொகை அதிகரித்துக்காணப்பட்ட போதிலும், அசம்பாவிதங்கள் இடம் பெறவில்லை.

கோவில் வீதிகளில் தவறிய சிறுவர் சிறுமியர், உடனுக்குடன் நல்லூரிலுள்ள யாழ். மாநகரசபை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டு, அவர்களின் உதவியால் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தொண்டர்கள், சகல வீதிகளிலும், சீருடையிலும் சாதாரன உடையிலும் நின்று மக்களுக்கு தேவையான உதவிகளை செய்தனர்.

கோவிலை சுற்றியுள்ள 5 தடைப்பகுதிகளில் தொண்டர்கள் காலை 4-30 மணி முதல் இரவு 8-30 மணிவரை தொடர்ந்து 24 நாட்களும் கடமையாற்றினார்கள்.

கோவிலில், தற்காலிக பொலிஸ் நிலையமோ, பொலிஸாரோ இல்லாதிருந்த போதிலும், தொண்டர்கள், மிகுந்த கட்டுப்பாட்டுடனும், கண்ணியத்துடனும், கடமையாற்றினார்கள்.

கடைப்பகுதிகளில், மக்கள் கூட்டம் மிகநெரிசலாக இருந்த போதிலும், எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை.

தீர்த்தோற்சவத்தின் போது பக்தர்கள் கூட்டம், அதிகரித்துவிட்டதனால் தொண்டர்கள் கட்டுப்படுத்த முடியாதநிலை உருவான போதும், இளைஞர்கள், தொண்டர்களுக்கு உதவியாக நின்று பக்தர்கள் கூட்டத்தை தீர்த்தக்கேணி மண்டபத்திலிருந்து அமைதியாக வெளியேறுவதற்கு உதவினார்கள்.

வழக்கத்திலும் பார்க்கஇம்முறை பக்தர்கள் கூட்டம் குறைவாக காணப்பட்டது. தற்போதுள்ள சூழ்நிலையில் வீதிகளை மூடி இம்முறை

(7ம் பக்கம் பார்க்க)

---

108, BROWN ROAD,
JAFFNA.

**A/L 86 பொது இரசாயனம்**

ஆரம்பம்: 31-8-84
வெள்ளி: 4-30 P. M.

ஆசிரியர்: சத்தீஸ்

புதன், வெள்ளி
4-30 P.M.
1479

---

## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை
ஆகஸ்ட் 1985
மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும்.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 3 - 9 - 84-ல் ஆரம்பமாகின்றன.

84/85-ம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு எமக்கூடாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 65 மாணவர்களுக்கு மேலாக மருத்துவம், பல்லறுவை மருத்துவம், விலங்கு மருத்துவ விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம், எந்திரவியல், பௌதிக விஞ்ஞானம், சட்டம் ஆகிய பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது எமது திறமைக்குச் சான்றாகும்

அதிபர்.

தொலைபேசி எண். 22617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 1283

---

வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்திற்கு
**27%** தொடக்கம் **30%** வரை
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.
குறைந்த தொகை ரூபாய் ஆயிரம் (1,000/-)
எந்நேரமும் அறிவித்தலின் பின்
பணத்தைத் திருப்பிப் பெறலாம்.
விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
போன்: 23698

---

## இடமாற்றம்

**Jase Institute**
TRIMMER HALL
21/6, வேம்படி ரோட், யாழ்ப்பாணம்.
மேற்படி நிறுவனத்தில் நடைபெற்ற சகல வகுப்புகளும் 1—9—84 முதல்
இல. 402, ஆஸ்பத்திரி வீதி
நாகம்மா கட்டிடத்திற்கு
(பஸ் நிலையம் முன்பாக டில்கா மேல்மாடி)
மாற்றப்பட்டுள்ளது
சகல வகுப்புகளும் 1-9-84 முதல் நடைபெறும்.
நிர்வாகி
Jase Institute.

---

## நன்றி நவிலல்

### ஆறுமுகம் இராசையா

22-8-84-ல் அமரத்துவம் அடைந்த எங்கள் மாண்புநிறை தெய்வம் ஆறுமுகம் இராசையா அவர்களின் மறைவிலன்றும், மறுநாள் கிரியைகளில் கலந்து கொண்டும், மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலிசெலுத்தியும், செய்திகள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தும், ஆறுதலளித்த உற்றார், உறவினர், நண்பர்களனைவருக்கும் எம் உளம்கனிந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்
திருமதி பரமேஸ்வரி இராசையா,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
38, 3-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். 1490

---

உ

## திருமண அழைப்பு

மணமகன் :
பிரம்மஸ்ரீ அ. கண்ணலிங்கசர்மா
(அதிபர், காரைநகர் இந்துக்கல்லூரி)
ஸ்ரீமதி க. மதுராம்பாள் தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
**செல்வன் சிவானந்தன் B.Sc.(Hons)**
(ஹட்டன் நாஷனல் வங்கி, புறக்கோட்டை, கொழும்பு-11)

மணமகள் :
பன்னாலை வரத்தலம் கற்பகவிநாயகர் தேவஸ்தான ஆதீனகர்த்தாவும் பிரதம குருவும் ஆகிய
பிரம்மஸ்ரீ இ. சபாரத்தினக்குருக்கள் அவர்களின்
(ஆசிரியர்-கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம்)
ஏகபுத்திரி
**செல்வி லலிதா**

இடம் : மணமகள் இல்லம்
காலம் : 31-08-1984 வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 8-32 தொடக்கம் 9-03 வரை
அன்று மாலை 4 மணி வதூவர கிருகப்பிரவேசம்

அ. நாகராஜசர்மா
(ஆயுர்வேத வைத்தியர்)
நா. சாவித்திரி அம்மாள்
''ஆனந்த பவனம்''
மூளாய் ரோட்,
வட்டுக்கோட்டை.

இ. சபாரத்தினக் குருக்கள்
சபா. ஞானேஸ்வரி
''சிவானந்தவாசம்''
பன்னாலை,
தெல்லிப்பழை.
1497



### தமிழக முன்னாள் முதல் அமைச்சர் பக்தவத்சலம் கூறுகிறார்

# இலங்கைத் தமிழர் பிரச்னையை எப்படி தீர்க்கலாம் என்று இந்திரா ஆராய்கிறார்!

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்னையை எந்தமுறையில் தீர்க்கலாம் என்பது குறித்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மிகக்கவனமாக ஆராய்ந்து வருகிறார் என்று முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு எம்.பக்தவத்சலம் நேற்றுக் கூறினார்.

''இந்தப் பிரச்னையை ராஜதந்திர முறையில் அணுகித் தீர்க்கவேண்டும். அதையே இப்போது இந்திரா செய்து வருகிறார்'' என்றும் திரு பக்தவத்சலம் சொன்னார்.

இலங்கைத் தமிழர்களுக்கு நடக்கும் அநீதியை பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. அது மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்துகிறது என்று குறிப்பிட்ட அவர்,

',இலங்கைக்கு இந்திய ராணுவத்தை அனுப்புவது சரியான தீர்வு அல்ல. அப்படி அனுப்புவதன் மூலம் உலக நாடுகளின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டி ஏற்படும்'' என்றார்'

இலங்கைப் பிரச்னை குறித்து அவர் மேலும் கூறியதாவது;-

''பஞ்சாப், பங்களாதேஷ் பிரச்னைகள் முற்றிலும் வேறுபட்டது. இலங்கைப் பிரச்னை போன்றதல்ல அப் பிரச்னை பஞ்சாப், பங்களாதேஷ் பிரச்னையை இந்தியா அணுகியது போன்று இலங்கைப் பிரச்னையையும் அணுகமுடியாது.

''சிக்கலான ஒரு பிரச்னை, அதனை மிகக் கவனமாக அணுகித் தீர்க்க வேண்டும். தனித் தமிழ் நாட்டுக்குப் பதிலாக சுயாட்சியுள்ள மாநிலமாக உருவாக்கும் யோசனை மிக நல்லது. இவ்விஷயங்கள் குறித்து இந்திரா ஆராய்ந்துவருகிறார்''

இலங்கைப் பிரச்னையில் நல்லதொரு முடிவு ஏற்படவேண்டும் என்பதே எங்கள் விருப்பம். அதற்காக நாம் நன்கு பரிசிலனை செய்து வருகிறோம்.''

## ஈரான் விமானத்தை ஒரு பெண்ணே கடத்தினர்!

(பாக்டாத்)

கடத்தப்பட்ட ஈரானுக்குச் சொந்தமான ஜெட் விமானமொன்று ஈராக்கினுல் கடத்தப்பட்டு பாக்டாத்தில் இறங்கப்பட்டுள்ளது.

ஒரு பெண்ணும், இன்னொருவருமே இந்த விமானத்தைக் கடத்திச் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயுதங்கள் எதுவும் பயன்படுத்தாது இந்தக் கடத்தலை நடத்தியதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன.

216 பிரயாணிகள் இவ்விமானத்தில் இருந்தனர்.

## வெங்கட்ராமன் வெள்ளியன்று பதவியேற்பு

புதுடில்லி, ஆக. 29

இந்தியாவின் 8வது உபஜனுதிபதியாக திரு ஆர்.வெங்கட்ராமன் எதிர்வரும் வெள்ளிக் கிழமை பதவியேற்கவுள்ளார்.

இந்திய ஜனுதிபதி திரு ஸெயில்சிங் ராஜ்பவனில் இவருக்கு பதவிப் பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைப்பார்

## சிரமதானம்

(மாவிட்டபுரம்)

வயாவிளான் ஒட்டகப்புலம் சென்மேரி சேமக்காலை சிரமதானம் மூலம் துப்புரவாக்கப்பட்டது.

மேற்படி சேமக்காலை பலகாலம் துப்புரவாக்கப் படாததால் புல்,பூண்டுகள் நிறைந்து காடுபோல் காட்சி அளித்ததையடுத்து அப்பகுதி கிராம சேவையாளர் திரு.யோ. அருளானந்தம் எடுத்த முயற்சியில் அப் பகுதி இளைஞர்கள் சிரமதானம் மூலம் செப்பனிட்டுத் துப்புரவாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

## பல லட்சம் செலவில் புனரமைப்பு

(மாவிட்டபுரம்)

ஊறணி புனித அந்தோனியர் ஆலயம் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு ஆரம்பவிழா நடைபெற்றது.

மேற்படி ஆலயம் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வந்தபோதும், முழு வேலைகளும் பூர்த்தியடையவில்லை. பொது மக்கள் வசதிக்காக முற்பக்கவேலைகள் பூர்த்தி செய்து ஆலயம் திறந்து வைக்கப்பட்டது.

யாழ் மறைமாவட்ட பேராயர் திரு. மைக்கல் சுவாமிகள் நாடா வெட்டி ஆலயத்தை ஆரப்பித்த வைபவத்தில் காங்கேசன் லங்கா சிமெந்து நிறுவன முகாமையாளர் திரு.விஜயமானே, காங்கேசன்துறை வர்தகப்பிரமுகர் திரு.க. ஜெயபாலசிங்கம், இளவாலை மறைமாவட்ட ஆயர் அன்ரன் ராசநாயகம் பாக்கிஸ்தானிலிருந்து வந்த வண. தனிநாயகம் அடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஓய்வூதியம் பெறுவோர் படும்பாடு!

## தாகத்தினுல் தவித்து மயங்கியும் விழுகின்றனர்!!

### பலர் சாப்பாடு, மருந்துக்குளிகையும் கொண்டுவருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

கொளுத்தும் வெயிலில் சுமார் ஆறுமணி நேரம், யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் ஓய்வூதியம் பெற கியூவில் காத்து நின்ற இரு வயோதிபத்தாய்மார்களும், ஒருவயோதிபரும், களைப்புற்றுத் தாகத்தினுல் தவித்துத் தரையில் மயங்கி விழுந்தார்கள்.

நேற்றுமுன்தினம் காலை 6 மணி முதல் ஓய்வூதியம் பெற இவர்கள், மற்றும் நூற்றுக்கணக்கான ஓய்வூதியக்காரர்களுடன் காத்து நின்றதாக வயோதிபர் ஒருவர் தெரிவித்தார். மயங்கி விழுந்தவர்கள் சுமார் அரைமணிநேரம்வரை படுத்திருந்தார்கள்.

அப்பகுதியில் குடிநீர் வசதி எதுவும் இல்லை. தண்ணீர் குடிக்க வேண்டுமென்றால், பெரிய கடைப் பகுதிக்குச் செல்லவேண்டும். கியூவில் நின்றவர்கள் தண்ணீருக்காகப் பெரிய கடைக்குச் சென்றால், திரும்பிவந்து முன்னணியில் இடம்பிடிக்க முடியாது. இந்த நிலையில் அவர்கள், தாகத்தால் நாவரண்ட நிலையில் காத்து நின்ற காட்சி பரிதாபத்துக்குரியதாக இருந்தது-

பாதிப்பேர்களிடம் தான் குடை இருந்தது. ஏனையோர் கடும் வெயிலில் தவித்துக் கொண்டிருந்தனர்.

யாழ். முனியப்பர் கோவிலின் எதிரிலுள்ள ஆலமர நிழலில் வெறும் புற்றரையில் சிலர் களைப்பினுல் சுருண்டு படுத்திருந்தனர்.

''யாழ். மாநகரசபை அல்லது வேறு தர்மவான்கள், குடிநீர் வசதியை எங்களுக்குச் செய்து தந்திருக்கலாம் என்று வயோதிபர் ஒருவர் மற்றவர்களிடம் கூறிக்கொண்டிருந்தார்.

ஒருபெண் கழுத்தில் அச்சரக் கூட்டுடன், குறுக்குக்கட்டுடன் ஓய்வூதியம் பெறவந்திருந்தார். வழக்கமாக அவர் தபாலகத்தில் ஓய்வூதியம் எடுத்ததாகவும், பட்டினத்திற்கு முதல் முறையாக வந்ததாகவும், தங்கள் கிராமத்தில் ஓய்வூதியம் எடுக்கும் வேறுசிலருடன் கூடிவந்ததாகவும் தெரிவித்தார்.

கொக்குவில், காங்கேசன்துறை, தெல்லிப்பளை பகுதியினருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு ஓய்வூதியக்காரருடன் ஒருவர் அல்லது இருவர் துணைக்காகக் கூடிவந்திருந்தனர், உதவிக்கு வந்தவர்கள் ஆலமரத்தின் கீழ் இருக்க ஓய்வூதியக்காரர் இருவரிசையில் விளையாட்டரங்கு எல்லைச் சுவருடன் காத்துநின்றார்கள்.

11 மணிச்குப் பின்னர் தான் அங்கு பணம் வந்து சேர்ந்தது. பணத்தைக் கணக்கிட்டு வவுச்சர் பத்திரங்கள் தயாரித்து ஏற்பாடு செய்ய 11-30 மணியாகிவிட்டது.

காலை 6 மணிக்கு ஓய்வூதியம் எடுக்க வந்தவர்களுக்கு தண் பகல் 12 மணிக்குப்பின்னரே ஓய்வூதியம் கிடைத்தது.

தூரஇடங்களிலிருந்துநடக்க முடியாத சில வயோதிபர்கள் வாடகைக் கார் பிடித்து வந்திருந்தனர். காருக்குமட்டும் 200 ரூபா வரை கொடுக்க வேண்டிவரும் என ஓய்வூதியக்காரர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார். வாடகைக்கார் 6மணி நேரம் தாமதித்து நிற்பதால், கூடியபணம் செலுத்த வேண்டும் என்றும் அவர்தெரிவித்தார்.

சிலர் காலைச்சாப்பாடு தண்ணீர் போத்தல், மருந்துக் குளிகைகளுடன் வந்திருந்தார்கள். காத்திருந்த சிலர் ஓய்வூதியம் எடுக்காமலும் சென்றனர். (க)

# நெடுந்தீவில் தரைதட்டிய இந்திய இழுவலைப் படகு!

[நெடுந்தீவு]

இந்திய இழுவலைப் படகு ஒன்று நெடுந்தீவு தெற்குக் கடற்கரையில் தரைதட்டியுள்ளது.

படகில் வந்த ஐந்து மீனவர்களும் நெடுந்தீவு கிழக்கு கிராம சேவையாளர் திரு நா. கணபதிப்பிள்ளை மூலம் நெடுந்தீவு அரசாங்க அதிபர் பணிமனையில் தஞ்சம் புகுந்துள்ளார்கள்.

இதற்குமுன்னர் கடந்த 20ம் திகதியும் இதே போன்று 'அன்னை வேளாங்கண்ணி' என்ற பெயர் கொண்ட இழுவலைப்படகொன்றும் நெடுந்தீவு தெற்கு வெல்லைப்பகுதியில் தரைதட்டி அதில் வந்த ஐந்து மீனவர்களும் இன்னும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலேயே இருக்கின்றனர்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் இம்மீனவர்களை விரைவிலேயே தாய்நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ள போதும் அது இன்னும் நிறைவேறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### வெளிநாட்டில் வேலைவாய்ப்பு:

## சுகாதார ஊழியருக்கு 2வருட சம்பளமற்ற லீவு

(பண்டத்தரிப்பு)

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை பெற்றுச் செல்ல விரும்பும் சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு இருவருட சம்பளமற்ற லீவு வழங்குவது பற்றிய சுற்றறிக்கையொன்று கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சினுல் வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் சகல தரங்களைச் சேர்ந்த ஊழியர்களிலும் ஒவ்வொரு வருடமும் வெளிநாட்டில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட தொகையினரே அனுமதிக்கப்படுவார்கள் என்று இச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாதிகள் உத்தியோகத்தர்களில் முப்பது பேரும், மருந்தாளர்களில் மூன்று பேரும், மருந்துக் கலவையாளர்களில் மூன்று பேரும், எழுது வினைஞர்களில் ஆறுபேரும், ஆஸ்பத்திரி மேற்பார்வையாளர்களில் ஒருவரும், சாரதிகளில் இருவரும், சிற்றூழியர்களில் ஐம்பதுபேரும் அகில இலங்கை ரீதியில் வருடமொன்றிற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெறுவதற்கு சம்பளமற்ற லீவில் செல்ல அனுமதிக்கப் படுவார்கள் என்று இச்சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஐம்பது வயதுக்குட்பட்டவர்களும், தமது பதவியில் நிரந்தரமாக்கப் பட்டிருப்பவர்களுமான ஊழியர்களே இந்த சம்பளமற்ற லீவுக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் இதில் மேலும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இச் சுற்றறிக்கையின் பிரதிகள் சகல நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகள், தொழிற் சங்கங்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் திரு லெனுட் பென்னம்பலான தெரிவித்துள்ளார்.

## தற்காலிகமாக மூடப்பட்டது

[கொழும்பு]

யாழ்ப்பாணத்தில் வங்கிகள் வழமைபோல் இயங்காததால், யாழ்.காப்புறுதிக் கூட்டுத்தாபன கிளையில் அலுவல்களை நடத்த முடியாதன் காரணமாகவே அக் கிளை தற்காலிகமாக மூடப்பட்டிருப்பதாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன பொது முகாமையாளர் திரு. பின்னவல தெரிவித்தார். (இ-வெ)

### தமிழ்கலாசாரத்தில் மோகம்:

## மட்டு நகர் வந்து மணம் முடித்த பிரிட்டிஷ் இளைஞர்!

(மட்டக்களப்பு)

தமிழ் கலாசாரத்திலும் தமிழ்ப் பெண்களிடமும் ஈடுபாடு கொண்ட பிரிட்டனைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மட்டக்களப்பு ஆயர் இல்லத்துடன் தொடர்பு கொண்டு யோசப் சிசிலியா புஷ்பம் என்னும் பெண்மணியைத் தமிழ்ப் பண்பாட்டுக்கமைய திருமணம் செய்து கொண்டார்.

கோவட்சிட்ணி யேயான் மாட்டின் யோன் என்னும் 37 வயது பிரித்தானிய இளைஞரே தமிழ் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவராவார்.

இவ்விளைஞர் மட்டக்களப்பு ஆயர் இல்லக் குருவானவர் மூலம் இப்பெண்ணைத் தெரிவு செய்தபின் மட்டக்களப்புமண்முனை உதவி அரசாங்க அதிபர் திரு. சதாசிவ ஐயர் வீட்டுக்கு கடந்தமாதம் வந்து தங்கியிருந்து திருமணத்துக்கு பதினுலு நாட்களுக்குமுன் நோட்டீஸ்போட்டு பின்திருமணம் செய்து கொண்டார்

மட்டக்களப்பு திருமணப் பதிவாளர் திரு. செ. பூபாலபிள்ளை முன்னிலையில் இத் திருமணப் பதிவு நடைபெற்றது,

புதுமணத் தம்பதிகள் 30-ம் திகதி லண்டன் செல்கின்றனர்.

## மணிவாக்கு

உபயோகிக்காத இரும்பு துருப்பிடித்து விடுகிறது; தேங்கி நிற்கும் தண்ணீர் தூய்மையை இழந்து நிற்கிறது; அதே போன்றுதான் ஒன்றும் செய்யாமல் சோம்பி நிற்கும் மனமும் செயல் ஆற்றலை இழந்துவிடுகிறது.

—அறிஞர் லியனுர்ல்டா

# நமது நோக்கு

## ஜனநாயகத்தின் காவலர்கள்!

அமெரிக்க ஜனுதிபதி ரெனுல்ட் றீகன் தேவாலயத்துக்கு ஒழுங்காகச்செல்வதில்லையாம். ஜனநாயகக் கட்சியின் சார்பில் அமெரிக்க ஜனுதிபதித் தேர்தலில் போட்டியிட நியமனம் கோரி தோல்வியுற்ற ஜெஸ்ஸே ஜெக்சன் இவ்வாறு குறைபட்டுக்கொள்கிருர்

மனித உரிமை இயக்கத் தலைவரும் பாப்திஸ்த சபையைச் சேர்ந்த மதகுருவுமான ஜெக்சன் திரு. றீகனின் சமய சம்பிரதாயங்கள் பற்றி சற்று நகைச் சுவையாக மட்டுமல்ல காரசாரமாகவும் கண்டித்துள்ளார்.

''றீகனின் ஆட்சியின் போது ஜேசுநாதர் இருந்தாராஞல் நல்லமுறையில் நடத்தப்பட்டிருக்கமாட்டார். பகுதிநேர தச்சரான ஜோசப்பு சோம்பேறி என இகழப்பட்டு தொழிற்சங்கத்தில் சேரவும்கூட அனுமதிக்கப்பட்டிருக்கமாட்டார்''என்று குறிப்பிட்டுள்ள ஜெக்சன்; ''மேரிக்கு ஒரு தாயாருக்கான பராமரிப்பும் கிடைத்திருக்காது, ஏதாவது கொட்டிலில் தான் அவர்களின் வாழ்வு நடந்துகொண்டிருக்கும்'' என்று சாடியுள்ளார்.

இதோடுவிடவில்லை றீகன் ஒரு நல்ல கிறிஸ்தவர் அல்ல குறிப்பிட்ட அரசியல் நன்மைக்காக சமயத்தை அவர் பயன்படுத்துகிருர் என்று மேலும் தொடர்கிருர்.

குடியரசுக்கட்சியின் சார்பில் அடுத்த ஜனுதிபதிதேர்தலில் திரு றீகன் மீண்டும் போட்டியிட கட்சியின் அனுமதியைப் பெற்றிருப்பதைத் தொடர்ந்து எதிர்க்கட்சி ஒன்றின் பிரமுகர் ஒருவர் இவ்வாறு விமர்சனம் செய்வது ஒன்றும் அதிசயம் மல்ல, ஆனுல் அந்த நாட்டில் வெள்ளையர் அல்லாத மக்கள் இன்னமும் ஏனையவர்களைப் போன்று சம உரிமைகளுடன் நடத்தப் படவில்லை என்பதை இடித்துக் காட்டுவதே மனித உரிமை இயக்கத் தலைவரான ஜெக்சனின் அடிப்படை நோக்கம் என்று கோள்ளவேண்டும.

உலகம் முழுவதும் ஜனநாயகத்தின் காவலர்களாக தம்மைப் பாவனைசெய்து கொள்ளும் அமெரிக்க நிர்வாகம் இன்னமும் உள்ளூர் நிர்வாகத்தில் கறுப்பர்களுக்கும், செவ்விந்தியர்களுக்கும் சமத்துவம் கிடைக்க வழிசெய்யாதிருப்பதையே ஜெக்சனின் கிண்டலும் கேலியும் எடுத்துக்காட்டுகின்றன.

குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடவிருக்கும் வோல்டர் மொன்டேலும் கூடத் தமது பிரசார ஊழியர்களில் அதிகளவு கறுப்பர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திவரும் ஜெக்சன், மொன்டேல் வெற்றிபெற்ருல்கறுப்பர்களுக்கு முக்கிய பதவிகளில் அதிக இடம் ஒதுக்கும்படியும் வற்புறுத்துவார் என்பதில் சந்தேகமில்லை.

நாகரிகத்தின் உச்சத்தை எட்டிவிட்ட அமெரிக்கர்கள் இன்னமும் கறுப்பு இனத்தவர்களின் பிரச்னையைத் தம் நாட்டிலேயே வைத்துக்கொண்டிருப்பதும், அதை மூடிமறைத்துக்கொண்டு வெளி உலகில் நீதி நியாயம்பற்றிப் பேசுவதும் விசித்திரமான நிலையாகும்.

யேசுநாதர் இப்பொழுது அமெரிக்காவில் இருந்தால், அவர் ஒரு ஏழைக் குடும்பத்தவர், வெளிநாட்டவர் என்ற நிலையில் எவ்வளவு தூரம் பாரபட்சமாக நடத்தப்படுவார் என்பதை ஜெக்சன் எடுத்தியம்பியிருப்பது அமெரிக்க மக்களின் சிந்தனையைத் தெளிவுபடுத்தவேண்டும்.

## ''முஸ்லீம் பெரியாரின் மறைவு பெரும் இழப்பு''

(யாழ்ப்பாணம்)

''முஸ்லிம் பெரியார் சேர் ராசிக்பரீத்தின் மறைவு இலங்கைவாழ் முஸ்லீம்களுக்குப் பேரிழப்பாகும். அவர் ஆற்றியதன்னலமற்ற பணி மகத்தானது. தனது சமூகத்தையே பெரிதாக மதித்து சேவை செய்த உயர்ந்த உள்ளம் கொண்டமனிதர்''

இவ்வாறு முள்ளியான் முகியிதீன் பள்ளிவாசல் தென்னைச் செய்கையாளர் சங்கத்தினர் தமது அனுதாபத்தில், குறிப்பிட்டனர்

சங்கத்தின் சார்பில், தலைவர் ஜனுப் வி. அபூபக்கரும் பொருளாளர் ஜனுப் எஸ். ஏ. ஸி. சகாப்தீனும் இந்த அனுதாபத்தை அனுப்பிவைத்துள்ளனர்

''சேவையைத்தவிர வேறு எதனையும் மனதில்கொள்ளாது, நாட்டுக்காக உழைத்த பெரியமனிதர். அந்த ஒப்பற்ற தலைவரின் மறைவு நம்மையெல்லாம் ஆழ்ந்ததுயரத்துக்குள் ஆழ்த்திவிட்டது'' என்றும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நிலையா முனதருளைத் தா!

நெஞ்சிற் பதிப்போர்க்கும் எண்ணித் துதிப்போர்க்கும்
தஞ்சமென் றடைவோர்க்கு மருள்பவனே—மஞ்சுதவழ்
மலைவாழ் உமைபாலா! எமையாள் கணநாதா!!
நிலையா முனதருளைத் தா!!

துதிக்கை யுடையானே மதிப்போர்க் கருள்வோனே
மதிக்காத தண்மதியைச் சபித்தோனே—விதிக்கையில்
சிக்கித் தவிக்குமெங்கள் விக்கினங்கள் விலகிடவே
விக்கினனே! விரைந்திங்கு வா!!

—ச. முருகையா

# மத்திய கிழக்கில் தங்கம்-புதுத்தெய்வம்

பண்டைக் காலத்தில் நாகரிக உலகத்தின் அரைப்பங்கை இஸ்லாமியர் கைப்பற்றினர் என்று வரலாறு கூறுகிறது. ஆனுல் இன்றைய நவீன உலகம் உதயமாகும் வரைக்கும் இஸ்லாமியர் புறக்கணிக்கப் பட்டும் ஏளனத்துக்கு உள்ளாகிவந்ததும் ஐரோப்பாவில் பரவிவந்த கிறீத்தவ நாகரிகத்தாலென்பது வரலாற்று நிபுணரின் கருத்தாகும்.

### புதிய செல்வாக்கு

இன்றைய சவூதித் தொழில் அமைச்சர் ஒரு பிரபல பேட்டியில். குறிப்பிட்டதுபோல் ''எங்களுக்கு இன்று வந்து கொட்டுண்ணும் பணமே நாம் ஒரு உலக வல்லரசு நிலைக்கு வழிகோலுகிறது'' என்ருர்.

'எண்ணெய்' இன்றைய புதுப் பணத்தின் இரகசியம். இது என்றும் நிரந்தரமானதோ, முக்கியமானதோ அன்று; இருந்தும் இதனுல் கிடைக்கும் அபரிமிதமான வருமானம் மேற்கத்திய நாடுகள் பல நூற்ருண்டுகளில் ஆற்றமுடியாத சாதனைகளை நாம் மிக விரைவில் நிறைவேற்றஉதவுகிறது.

எந்தச் செல்வ நிலையிலும் மதம் என்பது அரபு மக்களின் முதலாவது குறிக்கோள். இது உலகறிந்தகருத்து.

### அரபு நாடோடி

வங்கிகள், வர்த்தக தாபனங்கள், ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் உள்ள சொத்துக்கள் எல்லாம் உருப்படியாக விலைக்கு வாங்கப்பட்டாலும் இப்பாரிய செல்வத்தின் நியாயமான பங்கு உலகின் தலைசிறந்த பள்ளிவாசல்களில் செலாவாகின்றது.

### அபிவிருத்தி

அரபு நாடுகளின் விரிவான அபிவிருத்திக்கு நிதிசேகரிக்கப் படுகிறது அதன் இலட்சியம் இவ்வாறு குறிக்கப்பட்டிருக்கிறது. நாம் எங்கள் பழைய வறுமையை மறந்து விடவில்லை. இன்று எங்கள் செல்வத்தை பகிர்வதிலேயே நம்பிக்கை கொண்டுள்ளோம்.

அரபு உலக வானில் உதயமான இப்புதிய தெய்வம் 'தங்கம்' என்பதை அரபு மக்கள் ஆட்சேபிப்பதில்லை. எந்த அபூர்வமான பொருள்களையோ, சொத்துக்களையோ, அமைப்புகளையோ, சர்வதேச அற்புதங்களையோ கைக்காசு கொடுத்து வாங்குவதில் அரபு செல்வர்கள் தயங்குவதில்லை

ஆட்சி அடிப்படையில் நாட்டைத் திருத்தி, நவீன மயமாக்கி, மக்களுக்கு வேண்டிய வசதிகளை உருவாக்குதலில், இன்று பெருகிவரும் செல்வம் பயன் படுத்தப்படுகின்றது. ஆனுல் தனிப்பட்டவர்களின் வாழ்க்கையில் செல்வம் மது போல தலைக்கேறுவது இயற்கை.

### செருக்கில்லை

ஆடம்பர வாழ்வில் இன்பம் காணும் இன்றைய அரபு மக்கள் பற்றிய பல பரிகாசமான விடுகதைகள் உண்டு. செல்வத்தால் செருக்குற்றவர்கள் என்று கொள்ள முடியாத போதும் அவர்களின் ஆடம்பர வாழ்க்கை மற்றவர்களின் பொருமையையும் வெறுப்பையும் விருத்தி செய்வதை அவர்கள் அறிவதில்லை. அறிந்தாலும் பரவாய்பண்ணுவதில்லை.

காசே தெய்வம். இன்றைய தெய்வமென்பது சில பொழிப்பான சம்பவங்கள் விளக்கும் உண்மை.

### பொருள்தேடல்

அரச குடும்பத்தில் ஒருவர் நாட்டின் தலைவராஞல், மற்றவர் வர்த்தகம் பெரு வியாபாரம் போன்ற பொருள் தேடும் முயற்சிகளில் ஈடுபடுவர்.

இது ஒரு அநாகரிகமான மரபு என்று அவர்கள் நினைப்பதில்லை. மதத்துக்கு நாம் முதலிடம் கொடுத்தாலும், அதன் மகிமை இன்றைய செல்வத்தால் உலகறிய வந்திருக்கிறது என்பது அவர்களின் நம்பிக்கை.

எல்லோரும் ஒருகுலம் என்ற சகோதரத்துவம் இஸ்லாமின் முக்கிய போதனை. அது மறுப்பதற்கில்லை, இன்று பெருகிவரும் செல்வமே இந்த மதக் கோட்பாட்டின் செல்வாக்கை உலகறிய வைத்திருக்கிறது. எனவே இன்றைய தருணத்தைக் கைவிடாது இஸ்லாமிய சமூகத்தின் உலகளாவிய செல்வாக்கை பொருள்கொண்டே கட்டி எழுப்பவேண்டும்.

### ஆடம்பரம்

ஈட்டிய பொருளை அமெரிக்க வங்கியில் முதலீடு செய்தல், அதன் வரும்படியை லண்டனில் செலவு செய்தல் இன்றைய அரபு குபேரர்களின் சாதாரண வாழ்க்கை முறையாக வந்துவிட்டது

டுபாயில் வாழும் மக்களுக்கு வாழ்க்கை வெறும் உழைப்பாகவிருப்பதால் சில சமயங்களில் அலுப்புத்தட்டி விடுகிறது. எனவே பொழுதுபோக்குக்கு அவர்கள் சுவைக்கும் விடுகதைகள் பல.

அரபு மக்களின் இன்றைய ஆடம்பரச் செலவு பற்றிய

(5-ம் பக்கம் பார்க்க)

## அருணகிரிநாதர் வாக்கில் விநாயகர்



குழந்தைகளைப் போன்று விரைவில் மகிழ்தலும் தீமைகளை மறந்து மன்னித்தலும் தேவர்களைப் போல் நலன்கள் புரியும் ஆற்றலும் உடையவர் விநாயகர்.

கைத்தலம் நிறைகனி என்னும் திருப்புகழ் மூலம் விநாயக வணக்கத்தால்அறிவு, வெற்றி, இன்பம் போன்ற சகல நலன்களையும் அடையலாம் என்பதை அருணகிரிநாதர் கூறுகின்ருர்.

**ஐந்தாம் வேதம்** என்று புகழப்படுவது பாரதமாகும். மனிதவாழ்வை அறநெறியில் வாழ வேண்டிய முறையையும் பகை, வீரம், பொருமை, **தர்மம்**, போன்றவற்றின் **உண்மைத் தன்மைகளைத்**யும் தெளிவாக உணர்த்தி மனிதன் மனிதனுக வாழவும் பாரதத்தை உலகிற்குக் கிடைக்கச் செய்தவர் விநாயகக் கடவுளே யாவர்.

மாக- ஞானமயமாக விளங்கும் விநாயகப் பெருமான் உலகின் தகுதி கண்டு விளக்கி எழுதினுர் என்பதுபொருத்தமேயன்றி விநாயகப் பெருமானுலும் விளங்கிக் கொள்ள முடியாத கடினமாக வியாசர் இயற்றினுர் என்பதும், விநாயகர் நிதானித்து விளங்க வேண்டிய கடினமான நூல் உலகத்தவர்கட்குப் பயன்படும் என்பதும் பொருந்தாதன்ரே.

### தி. பொன்னம்பலவாணர்

வேதங்களை நான்காக வகுத்த வியாசர் தன்மனதில் பாரதத்தினை உருவாக்கியபின் எழுதமுடியாமல் வருந்திஞர். உலகிற்குப் பயன்படத்தக்க வகையில்பாரதத்தை எவ்வாறு எழுதுவது என்று பிரமதேவரை ஆலோசனை கேட்டார். பிரமதேவர் யோசனைப் படி வியாசர் விநாயகரை வணங்க,விநாயகப் பெருமான் மகாமேருமலையில் பாரதத்தை எழுதினுர். வியாசருடைய பாரதத்தில் எல்லோருக்கும் விளங்க சில இடங்களை விநாயகரே தெளிவாக்கிஎழுதினுர். ஆனுல் சிலர் வியாசர் இயற்றியபாரதப் பாடல்களில் விநாயகருக்கு விளங்காமல் இருந்த பாடல்களை யோசித்துத்தாமதித்தார் என்று கருதுகின்றனர். பிரணவ சொரூப

உலகம் நலம் அடையத்தக்கதாக தெளிவாகப் பாரதத்தைப் விரித்து எழுதியதையே அருணகிரிநாதர் ''முத்தமிழடைவினை முற்படு கிரிதனில் முற்பட எழுதிய முதல்வோனே,, என்ருர்.

சிவபெருமான் செய்த வீரச் செயல்கள் எட்டு என்பர். அவற்றுள்ஒன்று திரிபுரதகனம் ஆகும். திரிபுரதகனத்தில் சிவபெருமான் ஏறிய தேர் அச்சு முறிய விநாயகப் பெருமானின் முதன்மை எல்லோருக்கும் புலனுகியது.

'அச்சிவன் உறை ரதம் அச்சது பொடிசெய்த அதிதீரா, என்று பாடுகையில் விநாயகப் பெருமானை அதிதீரா என்றே அழைத்து சிவபெருமானே விநாயகர் அருளால் வெற்றி பெற்ருர் என்று உணரவைக்கின்ருர் அருணகிரிநாதர், விநாயக சதுர்த்தி விரதமகிமையைக் கூறும் போது இராவணசங்காரத்தின் பொருட்டு இராமரும் பாரதயுத்தத்தின் பொருட்டு பஞ்சபாண்டவரும் விநாய சதுர்த்தி விரதமிருந்தே வெற்றி பெற்றனர்.

( 5ம் பக்கம் பார்க்க)

# பலியான கூட்டுறவுச்சங்க ஊழியர் குடும்பத்துக்கு நிதிஉதவி

(நெடுந்தீவு)

கடந்த 13-ம் திகதி கைதடிச் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த போது பலியான தென்மராட்சிமேத்கு (கைதடி) ப. நோ கூ, சங்க ஊழியர்கள் மூவரின் குடும்பங்களுக்கு யாழ். மாவட்ட சகல ப. நோ, கூ. சங்கங்களும், தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கங்களும் உதவி வழங்க வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. இ. சிவமகாராசா தலைமையில் நடைபெற்ற 'சங்கங்களின் இன்றைய நிலை' என்ற கருத்தரங்கின் போது மேற்படி கோரிக்கை விடப்பட்டது.

கூட்டத்திற்கு சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. கே, சண்முகலிங்கம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஏ. சி. இக்பால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்ட சகல சங்கங்களும் இயன்றளவு உதவி ஊழியர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் கோரப்பட்டது.

## பாதிக்கப்பட்ட இடங்களில் பல்கலைக்கழக மாணவர் நிவாரணபப்ணி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், கடந்த இரு நாட்களாக வகுப்புக்களுக்குச் செல்லாமல் அண்மையில் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதிலும், மறறும் உணவுப் பொருட்கள், உடு புடவைகள் தளபாடங்கள் வழங்குவதிலும் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

வீடுகள், கடைகள் கோவில்களில் நிவாரணப் பொருட்கள் சேகரிக்கும்பணியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டிருந்தது தெரிந்ததே.

(மா)

## பாராட்டுப்பெற்ற எம் பதில் அதிபர்

இலங்கையின் கல்விவளர்ச்சி வரலாற்றில் சிறப்பாக இந்துக்களின் வரலாற்றில் மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்திய ஸ்தாபனங்கள் இரண்டு. கல்வித்தாகத்தைத் தீர்க்க நின்ற ஒரு இனத்தின் நியாயமான தேவையை, வாய்ப்பாகக் கொண்டு புதியதொரு நம்பிக்கையை புகுத்தளத்தனித்த ஒரு காலத்தில் தோன்றி வழிகாட்டியதோடல்லாமல், வழிவகுத்தது இத்தாபனங்களே இந்துக்கள் நாவில்நடம்புரிந்த பழம்பெரும் பெயர்கள் சைவவித்தியாவிருத்திச் சங்கமாகிய இந்து போட்டும், இந்துக்கல்லூரி அதிகாரசபையுமாகும் இவை இரண்டும் ஆற்றியகல்விச்சேவையும், மொழி, சமயத்தொண்டும் காலம்கடந்த புகழ்படைத்ததாகும்.

இவ்விரு தாபனங்கம் இணைப்புப்பாலமாக த்த பெருமை இந்து பாட்சு இராசரெத்தினம் அவர்களையேசாரும் பெரியார் இராசரெத்தினம் அவர்களினுல் உருவாக்கப்பட்டு யாழ். இந்துக்கல்லூரிக்கு வருகைதந்தவர் அமரர் திரு, சுப்பயைா அவர்கள் உடன் ஆசிரியர்களாலும் மாணுக்கர்களாலும் செல்லமாக சுப்பையா என்று அழைக்கப்பட்ட இவர் இருவேறு ஆசிரியர்கள் கூட்டத்தை இணைக்கும் கலைப்பாலமாக நின்றவர் ஆங்கிலக்கல்வியும் தமிழ்ப்புலமையும் தமிழ்ப்பண்பாட்டின் உருவமாகவும் காட்சிதந்த இவர், தோற்றத்தில் அசல்தமிழ் ஆசிரியராகத் தோற்றம் தந்தவர் பலர் ஏமார்ந்ததும் உண்டு.

கணிதம், புவியியல் போன்றபாடங்களை மேல்வகுப்புகளில் திறமையாகக்கற்பித்து மாணுக்கர் உள்ளங்களை கவர்ந்த நல்லாசான் யாழ். இந்துக்கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் பெரும்பங்கு கொண்டவர். புகழ்படைத்த அதிபர்கள் ஏ. குமாரசாமி, வி. எம். ஆசைப்பிள்ளை சி. சபாரத்தினம், என். சபாரெத்தினம் போன்ற கல்விமான்களின் நன்மதிப்பைப் பெற்ற ஆகிரியர். திருவாளர் என். சபாரெத்தினம் அவர்களின் ஆட்சிக்காலத்தில் பதில் அதிபராகப் பொறுப்பு ஏற்று திறம்படப் பணியாற்றியவர். ஒரு உண்மையையும் மறைத்தற்கில்லை.

வருடத் தொடக்கத்தில் கல்லூரிக்குப் போகும்போது, புன்முறுவலுடன் வரவேற்று ''இந்தாருங்கள் உங்கள் Time Table'' என்று ஒரு கடதாசி தருவார். நாங்கள் பார்க்க ஒரு சில நிமிடங்கள் தந்து ''சரிதானே மாஸ்ரர்'' என்று கேட்பார். ''சரி சேர்'' என்று சொல்வதைத் தவிர வேறு சொல்ல இடம் இருக்காது. ஆசிரியர்களின் தன்மை தெரிந்து பாடங்களையும், வகுப்புகளையும் தந்திருப்பார் நேரசூசி வகுப்பதில் தனக்கென ஒரு இடத்தை வகித்தவர் சுப்பையர் அவர்கள். கல்லூரியின் நிர்வாகமும் கல்விவளர்ச்சியும் அச்சிறு கடதாசியில் பெரிதும் தங்கியிருந்தது.

ஆசிரிய உலகில் பாடசாலைக் கருமங்கள் மட்டுமல்லாமல், ஆசிரியர் நலன்பேணும் இயக்கங்கள் அத்தனையிலும் பெரும் பங்குகொண்டு ஆக்கமான ஆலோசனைகள்பல தந்து வரலாறு படைத்தவர். கற்பித்தல் மட்டுமல்லாது. கற்பதிலும் ஒரு உதார புருடனுக வாழ்ந்தவர். London Matric தராதரத்துடன் ஆரம்பமான ஆசிரியத் தொழிலை, லண்டன் பல்கலைக்கழக B. A. Hons. பட்டத்தையும் பெற்று யாழ்/ இந்துக்கல்லூரியின் பதில் அதிபராகப் பாராட்டுப் பெற்று ஓய்வு பெற்றவர் எம் உள்ளத்தை விட்டு விலகாதவர்.

அமரர் க. சுப்பையா அவர்களை யாழ்/இந்துக்கல்லூரி என்றும் மறவாது.

—க. சிவராமலிங்கம்

## நல்லூர் ஆலயத்தில் மட்டும் ரூ. 50ஆயிரம் நிதிசேகரிப்பு!

[கோண்டாவில்]

வல்வெட்டித்துறை, மன்னுர் அச்சுவேலி ஆகிய இடங்களில் இடம் பெற்ற வன்செயலின் போது பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமாணவர்கள் நல்லூர் கந்தசாமி கோவில் ஆலய உற்சவத்தின் போது மட்டும் ஐம்பதினுயிரம் ரூபாவரையில் நிதி சேர்த்துள்ளனர். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் நல்லூர் கந்தசாமிஆலயத்தில் தொண்டாற்றிய சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைவீரர்கள். சாரணர்கள் இந்து இளைஞர்பேரவை உறுப்பினர்கள் ஆகியோருக்கும் தமது பாராட்டு தல்களையும் நன்றியையும் தெரிவித்துள்ளனர்.

## ரூ. 1 லட்சத்து 79 ஆயிரம் வவனியாவில் கொள்ளை!

(வவனியா)

வவனியாவிலுள்ள ஒரு பிரபல நகை அடகு பிடிப்பவரிடமிருந்து ஒரு லட்சத்து 79 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப்பணம், தங்கநகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 6-30 மணியளவில் நடந்துள்ளது.

ஹொறவப்பொத்தானை வீதியிலுள்ள எஸ். சண்முகம் என்பவரது வீட்டிலிருந்தே இந்தக் கொள்ளை நடந்துள்ளது.

சம்பவதினம் சைக்கிளில் வந்த இரு வாலிபர்கள் மேற்படி முதலாளியின் வீட்டிற்குள் சென்று கைத்துப்பாக்கியினைக் காட்டி இக்கொள்ளையினை நடத்தியுள்ளனர். சம்பவம் நடந்தபோது குறித்த முதலாளி அங்கு இருந்துள்ளார்.

ஒரு லட்சத்து 64 ஆயிரம் பெறுமதியான தங்கநகைகளும், 15 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமுமே கொள்ளையடிக்கப்பட்டவையாகும் என விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

குறித்த இரு வாலிபர்களும் 'லோங்ஸ்' அணிந்திருந்தவர்கள் என விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

வவனியா உதவிப்பொலிஸ் அதிபர் திரு ஜெயராஜன் ஸ்தலத்துக்கு சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற் கொண்டார்.

இதுதொடர்பான முழுவிசாரணையையும் வவனியா பொலிஸ் நிலைய குற்றவியல் பகுதி சப் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை நடத்தியுள்ளார்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைச் சேர்ந்த நாகலிங்கம் மகேந்திரனின் மரணசாதன சொத்துக்கள் விடயத்தில் (காலஞ்சென்றவர்) நாகலிங்கம் மகேந்திரன் கைம்பெண் மல்லிகாராணி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

—மனுதார்

வழ. இல:- தத்துவம் /3786

—எதிராக—

1 தம்பிப்பிள்ளை சேனுதிராஜாவும் பெண்
2. மினனல்கிளியும்,
3 நாகலிங்கம் தில்லையம்பலம்,
4 நாகலிங்கம் கனகேஸ்வரன்.
5. நாகலிங்கம் ஜெகநாதன்,
6. சோதிலிங்கமும் பெண்
7. மகேஸ்வரியும், எல்லோரும் உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்

—எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டுள்ள காலஞ்சென்ற நாகலிங்கம் மகேந்திரனுல் நொத்தாரிஸ் பொ காங்கேயன்முகநாவில்23-08-1980ல் 2999-ம் இலக்கத்தில் முடிக்கப்பட்டுள்ள மரணச்சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுஅதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு ஆனி மாதம் 29ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்று காரணம் காட்டுவதற்கு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

இந்த 1984-ம் ஆண்டு வைகாசி மாதம் 7ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு.குலசிங்கம்
(ஒப்பம்)
பதிவாளர்

என்னுல் வரையப்பட்டது
பொ.காங்கேயன்
மனுதாரின் சட்டத்தரணி

காரணம் காட்டுவதற்குரிய மறு தவணை 31-08-1984

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்
கு.குலசிங்கம்
532

## தமிழ்நூல்களை அனுப்பி உதவுங்கள்

இந்தோனேஷியாவில் இப்போது தங்கியிருந்து தமிழறிவையும் சைவ உணர்வையும் ஊட்டிவரும் சமயப் பெரியார் 'ஆத்மஜோதி' நா. முத்தையா எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது;-

இந்தியாவுக்கு அடுத்தபடியாக இந்துக்கள் அதிகமாக வாழும் இந்தோனேஷியாவில் தமிழ் தெரிந்த இந்துக்கள் 25 ஆயிரம் பேர் இருக்கின்றனர். மற்றைய இரண்டுகோடிக்கும் அதிகமான இந்துக்கள் இந்தோனேஷியமொழியையே பேசுகின்றனர். அவர்களுக்குப் பகவத்கீதை, பிரமசூத்திரம் போன்ற வேதாந்த நூல்கள் அரசாங்கம் தன் செலவிலேயே அச்சிட்டுக் கொடுத்து வருகிறது ஆனுல் தமிழர்களாகிய இந்துக்களுக்கு நூல்கள் வெளிநாடுகளிலிருந்து தான் வரவேண்டியுள்ளன. ஏனென்ருல் தமிழ் எழுத்துக்கள் உள்ள அச்சகங்கள் ஒன்றுகூட இங்கு இல்லை. பெரும்பான்மையான மக்கள் ஏழைகள். இங்குள்ள தமிழ் தெரிந்தவர்கள் பயன்பெறும் வகையில், ஒரு தமிழ் நூலையாவது (அது இலக்கிய சமய நூலாயினும்) பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

SRI MARI AMMAN KOVIL, 18 JALAN TEUKU UMAR MEDAN - SUMTRA INDONESIA.

## சம்பளம் வழங்கப்பட்டது

[மாவிட்டபுரம்]

வலி-வடக்குபகுதியில் உள்ள அரசாங்க இலாகாவினரின் சம்பளம் தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தினரால் வழங்கப்பட்டது.

வலி- வடக்கு பகுதியில் உள்ள அரசாங்க இலாகாவினருக்கு உரிய சம்பளத்துக்கு உரியகாசோலைகள் குறிப்பிட்ட இலாாக்களுக்கு அனுப்பப்பட்டது.

இப்பகுதியில் உள்ள வங்கிகளில் வேலைகள் நடைபெருததால் மேற்படி காசோலைகள் தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தில் கொடுத்து பணம் பெறும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பாராட்டு

[பண்டத்தரிப்பு]

யாழ். மாவட்டத்தில் சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இம் மாதத்திற்கான சம்பளத்தை யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் உரியகாலத்தில் தயாரித்து அனுப்பி வைத்துள்ளது குறித்து பாராட்டுதெரிவிக்கப்பட்டுள்ளது.

## அருணகிரி ..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று பிள்ளையார் கதை பாடுவதிலிருந்து வெற்றியை வீரத்தை அருளவல்லவர் விநாயகர் என்பதை அறியலாம்.

சைவ முறைப்படி கலியாணம் செய்வோர் அனைவரும் விநாயக வழிபாடு செய்தே திருமணம் செய்வர். திருமணச் சடங்குகளைச் மிகச் சுருக்கமாகவே செய்ய எண்ணுவோர் பிள்ளையார் பூசையுடனேயே தாலிகட்டுவர். விநாயகப் பெருமான் வள்ளி திருமணத்திற்கு முருகனுக்கு அநுக்கிரகித்ததின் மூலம் இல்லறஇன்ப வாழ்வுக்கும் வழிவகுப்பவராக அநுக்கிரகம் செய்பவராகத் தொழப்படுகின்ருர். நளன் தயமந்தி ருக்குமணி கிருஷ்ணன் கலியாணமும் விநாயகப் பெருமானின் அருளாலேயே நிறைவேறியதைப் பிள்ளையார்கதை கூறுகின்றது. 'அக்குறமகளுடன் அச்சிறுமுருகனை அக்கணம் மணமருள் பெருமாயே'' என அருணகிரிநாதர்விநாயகப் பெருமானைத் துதிப்பதிலிருந்து திருமணவாழ்வை விரைவாகவே அருள்பவர் விநாயகர் என்னும் உண்மை தெரிகின்றது.

## மத்திய...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கதைகள் ஏராளம்; அமெரிக்காவில் உல்லாசமாகக் காலங்கழித்த இரு சவூதி இளவரசர், காசு தட்டுப்பட்டவுடன் நியுயோர்க்கில் இருந்து விடுத்த அவசரகோரிக்கையின் விளைவு, அமெரிக்க வங்கி அதன் அலுவலக நேரத்தை பொருட்படுத்தாது ஒருவிசேட தூதுவர் மூலம் இரண்டு லட்சம் டொல்லர் அனுப்பிவைத்தது! அந்த இரு அரசரின் வார இறுதிச் செலவுக்காகவென்பது குறிப்பிடத்தக்கது.

இலண்டனில் பரவிவரும் கதைகள் மிகச் சுவையானவை. அங்கு ஒரு பல் வைத்தியரிடம்போன அரபுகோடீஸ்வரர் பல்லுப்பிடுங்கி முடிந்ததும் டாக்டரிடம் பில் கேட்டாராம். 50.00 பவுண் என்று குறிக்கப்பட்டிருந்தது. தசம் பற்றி நன்கறியாத அரபுச் செல்வர் 5000 பவுனுக்கு ஒரு காசோலை எழுதிவிட்டார் டாக்டர் 50 பவுண் தானே என்று அந்தப் பிழையைத் திருத்த எத்தனித்த போது, ''பரவாயில்லை, டாக்டர் இதற்காக இன்னொரு செக் எழுத முடியுமா? அதனை எடுத்துக் கொள்ளுங்கள் என்றுராம்.

மத்திய கிழக்கு நாடுகள் ஆன்மீக அடிப்படையிலும், மத நம்பிக்கையிலும் பல நூற்றுண்டுகளாக ஊறித் திளைத்தவை, ஆனுல் இன்றைய நவீன மேற்கத்திய உலோகாயதம் அவற்றை மாற்றிவருவது கண்கூடு.

இலங்கையிலிருந்து திரவியம் தேடிப்போகும் பெரும் புள்ளிகள் வேறுலகில் இருந்து வந்த 'தேவர்கள்' போல் நடிப்பதும் இன்னெரு கசப்பான அனுபவம்.

'ஓ' நீங்கள் வசிப்பது இலங்கையா? என்றநளினம் முந்திப் போன தீவாருக்கு உண்டென்ருல் புதுப்பணத்தின் தாக்கம் இருந்தவாறென்னே!

பாராளுமன்றத்தில் கடந்தவாரம் — இ. கந்தசாமி

# அரசுக்கு எதிராக பாணம் தொடுத்த பிரதி அமைச்சர்!

(நேற்றைய தொடர்ச்சி)

மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் வடக்கில் சில வாக்குப்பெட்டிகள் எரிக்கப்பட்டன. சில காணுமல்போய்விட்டன. இதுபோன்ற சம்பவங்களை சட்ட பூர்வமாக்கவே தேர்தல் சட்டங்களில் இப்போது திருத்தம்கொண்டுவரப்படுகிறது என்று கூறினுர் ஹக்மீமன எம். பி. றிச்சர்ட் பத்திரன

கொத்மலை, ஹக்மீமன உறுப்பினர்கள் உரையாற்றியவேளை சபையில் சிறிது இரைச்சலைக் கேட்கக்கூடியதாக இருந்தது. இவர்களது கருத்துக்கள் அரசு தரப்பு பின்வரிசை உறுப்பினர்களுக்குப் பிடிக்கவில்லைப் போலும் உபசபாநாயகர் பல தடவை தலையிட்டு அமைதியை நிலைநாட்ட வேண்டி ஏற்பட்டது.

பதினொருமணியாகியபின் பிரதமர் விவாதத்திற்குப்பதில் கூறஎழுந்ததும் ஹலீம் இஷாக்கின் ஆசனத்திற்கு அருகிலிருந்த தினேஷ் எழுந்து சபாநாயகரிடமும் பிரதமரிடம் அனுமதிபெற்று வெளியே சென்றிருந்த ஹலீம்இஷாக்கை அழைத்து வந்துபேச வைத்தார்.

ஹலீம் இஷாக்குக்கு பேச அனுமதிக்குமாறு சபாநாயகரிடம் பிரதமர் கேட்க, அனுமதி ''இதுதான் ஜனநாயகம்'' என்று பல குரல்கள் எழுந்தன பிரிட்டிஷ் ஆட்சி முதல் 1920ம் ஆண்டிலிருந்து நாம் அனுபவித்து வந்த வாக்குரிமையை இன்று இழக்கும்நிலை ஏற்பட்டுள்ளது என்றும்—

'நக்ஸலைட்' என்று அரசினுல் பெயர்சூட்டப்பட்ட சிறிலங்கா மக்கள் கட்சியினரை இன்று சபைக்குள் வருவதற்கும் அரசே வழிவகுத்துள்ளது என்றும் கூறினுர் ஹலீம் இஷாக்.

ஊழல் மோசடியின்றி இடம் பெற்றதாக நீங்கள் கூறும் ஜனுதிபதி தேர்தலில் எமது ஜனுதிபதிக்கு வாக்களித்த 53வீதமான மக்களும் 2மாதத்துக்குள் மனம்மாறி சர்வ சன வாக்கெடுப்பில் அவருக்கு எதிராக வாக்களிப்பார்களா? என்று கேள்வி எழுப்பிய பிரதமர் மைத்திரியை மேலும் சாடுகிருர்—

சுதந்திரக்கட்சியிலோ திருமதி பண்டாரநாயக்காவிலோ உள்ள விருப்பத்திஞல் மைத்திரி சுதந்திரக்கட்சியில் இருக்கவில்லை இந்தஉலகில் வேறு எதுவும் செய்யமுடியாத நிலையிலேயே அவர் சுதந்திரக் கட்சியில் இருக்கிருர்.

தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை அடுத்து அரசியல் அமைப்பின் 9வது திருத்தம் எதிர்ப்பின்றி நிறைவேறியது.

ஊர் உறங்கியவேளை சரியாகப் பன்னிரண்டு மணி மாதாந்த நாடகத்தின் முதற்கட்டத்தில் வழமைபோல் கடந்த ஒரு மாதத்தில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்கள் அடங்கிய பட்டியலைவாசிக்கிருர். பாராளுமன்ற விளையாட்டுத்துறை மந்திரி வின்சன்ட் பெரேரா பத்திரிகையாளர் கலரிக்கும் அதன் பிரதிகள் வருகின்றன.

இம்முறை அரசு தரப்பிலிருந்து அதுவும் பிரதி அமைச்சரிடமிருந்தே அரசுக்கு எதிராக பாணம் ஒன்று தொடுக்கப்படுகிறது—

ராஜாங்க அமைச்சின் செயலாளரும் தகுதிவாய்ந்த பத்திரிகைத் தணிக்கை அதிகாரியுமான டக்ளஸ் லியனகே, இலங்கையில் அண்மையில் அமைக்கப்பட்ட இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவு குறித்து இஸ்ரேலியப் பத்திரிகைக்கு அளித்த பேட்டி குறித்த தமது ஆட்சேபனையை தபால் தந்தி பிரதி அமைச்சர் அப்துல் மஜீத் பகிரங்கமாகத்தெரிவித்தார்.

லியனகேயின் பேட்டி எமது நாட்டின் தேசிய நலனைப் பாதிப்பதாக உள்ளது. குறிப்பாக அரபு நாடுகளுடனுன வேலைவாய்ப்பு ஒப்பந்தம், தேயிலை வர்த்தகம் ஆகியன பெரிதும் பாதிக்கப்படும் என்றும் அவர் கூறினுர்.

உடனேயே தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித்திடமிருந்து பதில் கிடைத்தது—

லியனகேயின் பேட்டி இலங்கை அரசின் கொள்கையைப் பிரதிபலிக்கவில்லை. இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவினுல் அரபு நாடுகள் தொடர்பான இலங்கையின் கொள்கையிலும் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவளித்துவரும் எமது நாட்டின் கொள்கையிலும் எதுவிதமாற்றமும் இருக்காது என்று தாம் மீண்டும் உறுதியளிப்பதாகக் கூறி விடயத்துக்கு முற்றுப் புள்ளிவைத்தார் லலித்.

எனினும் அடுத்து உரையாற்றிய தினேஷ், லியனகேயின்செயலை வன்மையாகக் கண்டித்ததுடன் அவர் நாடு திரும்பியதும் அவரைப் பதவியிலிருந்து வெளியேற்றவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதே விவகாரத்தை ஹலிம் ஷாக்கும் தமது உரையில் ஆட்சேபித்த வேளை ராஜாங்க அமைச்சர் அல்விஸ் அதற்கு சிறுவிளக்கம் அளித்தார்.

விடுமுறையில் சென்ற லியனகே நைரோபிக்கும் பிரிட்டனுக்கும் செல்வதாகவே கூறிச் சென்றுர். இஸ்ரேல் சென்றதுபற்றி எமக்குத் தெரியாது. அத்துடன் அவர்அங்கு கூறியது அரசின் கருத்தல்ல எனினும் அவர் நாடு திரும்பியதும் ஜனுதிபதி அந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்துவார்.

இரு விவாதங்களிலும் நீண்ட நேரத்தை எடுத்து கொண்ட அனில் அவசரகாலச் சட்டவிவாதத்தில் பல முக்கிய சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டார். இவரது சில கூற்றுக்கள் சில தடவைகளில் பிரதமருக்கு கோபத்தை ஏற்படுத்திவிட்டது.

கூட்டணி, கம்யூனிஸ்ட், காங்கிரஸ், சுதந்திரக்கட்சி ஆகிய கட்சிகள் இல்லாத வட்டமேசை மகாநாட்டில் எடுக்கப்படும் முடிவகளை எவ்வாறு நிரந்தர அரசியல் தீர்வாக ஏற்க முடியும்?—

தமிழர் பிரச்னை எமது உள்நாட்டுப் பிரச்னை - எமது உள்நாட்டுப் பிரச்னையில் இந்தியாவைத் தலையிடவைத்தது அரசாங்கமே.

பார்த்தசாரதியை இலங்கைக்கு அழைத்ததே அரசு செய்த முதலாவது தவறு. இந்தியாவில் எமது நிலை குறித்து தவறுன அபிப்பிராயம் நிலவுகிறது. அந்த நிலையை மாற்றி உண்மை நிலையை எடுத்துரைக்க இங்கிருந்து சகல கட்சிகளும் அங்கம் வகிக்கும் பாராளுமன்றத்தூதுக்குழு ஒன்றை அங்கு அனுப்ப வேண்டும்.

இந்தியாவுக்கு எதிராகக் குற்றம் சாட்டும்போது ராஜதந்திரத்துடன் உரையாற்ற வேண்டும்.

இவ்வாறு அனில் கூறிய போது குறுக்கிட்ட பிரதமர்

(7-ம் பக்கம் பார்க்க)

## 29பைன்ட் இரத்தம் சேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடந்து முடிந்த நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவின் போது றேட்டரிக் கழகத்தினர் ஏற்பாடு செய்திருந்த இரத்தம் சேர்க்கும்இயக்கம் நல்ல பயன் அளித்துள்ளது தெரியவந்துள்ளது.

44பேர் இரத்தம் வழங்கியிருப்பதாகவும் 29 பைன்ட் இரத்தம் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் றேட்டரிக் கழகம் அறிவித்துள்ளது.

கோட்டை பள்ளிவாசலில்

## சேர்.ராசிக்பரீத் மறைவுக்கு ஜனசாத் தொழுகை

[யாழ்ப்பாணம்]

இலங்கை மக்களின் அரசியல் மாமேதையும், இலங்கை சோனக இஸ்லாமியசமுதாயத்தினரின் ஒப்பற்ற உயர் தலைவருமாயிருந்து, இம் மாதம் 23ம் திகதி இரவு 11.15ல் உயிர் நீத்து, 24ம்திகதி மாலை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்பட்ட மர்ஹூம் அல்ஹாஜ் சேர். ராஸீக்பரீத் அவர்கள் பெயரால், யாழ்ப்பாணம், முதலாம் வட்டாரம், முதலாம்குறுக்குத்தெருகோட்டை முஹியித்தீன ஜூம்ஆப் பள்ளி வாசலில் 25ம் திகதி ளுஹர் தொழுகையின் பின் ஜனஸாத் தொழுகை தொழுவிக்கப்பட்டது இத் தொழுகையை மேற்படி ஜூம்ஆப் பள்ளிவாசல் கதீப் ஜனுப். எம் ஸீ அப்துல் லதீப் தொழுது முடித்தபின், அங்கு குழுமியிருந்த ஜமாசுத்தருக்கு நாரி சாவும்வழங்கப்பட்டது.

தொழுகைநிறைவேறியதை அடுத்து, காலம் சென்ற தலைவரவர்கள் சோனக இஸ்லாமிய சமுதாயத்தினருக்குச் செய்துதவிய அளப்பரிய சேவைகளையும், தொண்டுகளைப் பற்றியும், கதீப் பாராட்டி பேருரை நிகழ்த்தி, இப்படியான தோர் மாபெரும் சமுதாயத் தலைவருக்கு இந்நாட்டில் வாழ் ஒவ்வொரு முஸ்லிமும் கடமைப்பாடுடையவரே என்றும், அதனுல் இந் நாட்டிலுள்ளஒவ்வொரு பள்ளிவாசலிலும் இத் தலைவராவர்கள் பேரில் ஜனஸாத் தொழுகை தொழுவித்து, இத் தலைவரவர்களின் ஆத்மசாந்திக்கு துஆச் செய்ய வேண்டியது நன்றிக்கடமைக்குரிய செயலே என்றும், சமுதாயத்தினரை வலியுறுத்தி வேண்டுதல் புரிந்தார்.

இவ் வைபவத்தில் சமூகமளித்திருந்த வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஆலோசனைசபை உறுப்பினரான ஜனுப் எம். ஈ ஷாஹுல் மேற்படி தலைவர்கள் சமுதாயத்தினருக்குச் செய்துதவிய பொதுப்பணிகள் பற்றியும், குறிப்பாய்இத்தலைவர்கள் அரசாங்கத்தை ஊக்குவித்து பொம்மை வெளிக் காணியை யாழ் முஸ்லிம காணியற்ற பல வறியவர்களுக்கு குடியேற்றப் பெற்றுக்கொடுத்த வரலாற்றைப் பற்றியும் விளக்கி உரை நிகழ்த்தினுர்.

## இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—14(30-08-1984)
வாரம்—வியாழன்
திதி—சதுர்த்தி பிற்பகல் 4-28வரை
நக்ஷத்திரம்—சித்திரை பின் இரவு 1-36 வரை

மேடம்:- கடன் தொல்லை அதிகரிக்கும் குடும்பப் பிரிவுகள் ஏற்படும் மனத்தளர்ச்சி ஏற்படும் நிதானம் வேண்டும்.

இடபம்:- புண்ணிய யாத்திரை யொன்று மேற்கொள்ளப்படலாம் பெரியோர் ஆதரவு கட்டாயம் கிடைக்கும் பிதாவழிப் பெருமையும் உண்டு.

மிதுனம்:- உண்மைவழி நின்று உயர்வடைவீர்கள் தொழிலில் லாபம் கிட்டும் நிலைமாற்றமும் ஏற்படலாம் வாழ்க்கையும் மலரும்.

கடகம்:- செல்வாக்குப் பெருகும் வரவில் உயர்வுதென்படும் பிறபொருள் வரவும் உண்டு தெய்வ அருளும் உண்டு,

சிங்கம்:- உறவுகளில்பிளவு தென்படும் தொழில்துறையில் மந்தநிலை ஏற்படும் வீண்பழிக்கும் ஆளாகுவீர்கள் கவனம் செலுத்தவும்.

கன்னி:- கொடுக்கல் வாங்கல் பிணக்கு உருவாகும் உதவி செய்யப்போய்ப் பகையைச் சம்பாதிப்பீர்கள் அரசபயமும் உண்டாம்.

துலாம்:- கருத்துடனே காரியத்தைச் சாதிப்பீர்கள் வெளியூர்ச் செய்தியொன்று மகிழ்ச்சிதரும் குடும்பத்திலும் குதூகலம் தென்படும்.

விருச்சிகம்:- எதிலும் அவசரம் கோபம் தென்படும் சகோதரவழிச் சஞ்சலம் ஏற்படும் தற்பெருமையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

தனுசு:- பந்தபாசம் உங்களைப் பரவசப் படுத்தும் உறவினர் சகாயம் கல்வித் துறையில் அதிக ஈடுபாடும் ஏற்படும்.

மகரம்:- இனிமை பயக்கும் தினம் இன்று அன்பர்கள் ஆதரவு கிடைக்கும் பொது மக்கள் மத்தியில் மதிப்புஉயரும் உற்சாகம் பிறக்கும்.

கும்பம்:- சூழ்ச்சிவலை விரிக்கும் வழக்கு விவகாரம் ஏற்படும் வீண்செலவு உண்டு தெய்வநம்பிக்கை நன்று.

மீனம்:- நிதியில் முடக்கம் ஏற்படும் சிலர் வீண்பழிக்கும் இலக்காகுவர் விஷமிகள் தொல்லை புதிய உருவைஎடுக்கும் பயிர் செய்கையில் பாதிப்பு ஏற்படலாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

மல்லாகத்தில்

## தச்சுப்பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

தொழில் திணைக்களத்தினுல் நடாத்தப்படும் தச்சுப் பயிற்சி நிலையமொன்று மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் செப்ரம்பர் மாத முதற்பகுதியில் ஆரம்பிக்கப் படவுள்ளது. இதில் 18 வயதிற்கு மேற்பட்டோருக்கு 9 மாதங்கள் பயிற்சியளிக்கப் படும். பயிற்சிக்காலத்தில் நாளொன்றுக்கு ஐந்து ரூபா வீதம் வழங்கப்படுவதோடு பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

பயிற்சி வகுப்பில் ஒரு தடவையில் இருபது பேர் மாத்திரம் சேர்த்துக்கொள்ளப்படுவராதலால் இவ்வகுப்பில் சேர விரும்பியோரை மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் செப்ரம்பர் 5-ம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

மசாசூசெற்ஸிலுள்ள ஒரு தாபனத்தின் உதவியுடன் மல்லாகத்தில் தொழில் நுட்பக்கல்லூரி ஒன்றை நிறுவ முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாகவும் மேற்படி சங்கத் தலைவர் திரு. பாஸ்கரன் தெரிவித்துள்ளார். (பா)

## முதலுதவி முகாம்

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு உற்சவகாலம் முடிவடையும் வரை சென். ஜோன்ஸ் அன்புலன்ஸ் படையின் முதலுதவிச் சிகிச்சை முகாம் இயங்கவுள்ளது.

வீதி ஒழுங்கு, பாதுகாப்பு ஆகிய கடமைகளிலும் இப்படையினர் அங்கு ஈடுபடுவார்கள் என்றுசென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தெரிவித்தார்

## ரூபவாஹினி

மாலை
5-30 'நியூஸ் றிவியூ' [ஆங்கிலம்]
6-00 'ஹியர் இஸ் ரூமர்' (ஆங்கிலம்)
6-25 'அப் அன் டவுண்' (ஆங்கிலம்)
6-40 சோவியத் சித்திரம்
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 உலக நடனங்கள் 'நோர்வே, டென்மார்க்
7-45 தகவல் நிகழ்ச்சி (சிங்களம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 நாடகம் (சிங்களம்)
9-05 'கோல்டன் மூமன்ற்' பாகம்-2 (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'கோல்டன் மூமன்ற் தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 விவரணச் சித்திரம்
11-00 நிகழ்ச்சிகள் முடிவு

## வானொலியில் இன்று

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 பஜன்
5-50 பக்திப்பாடல்
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமிய நற்சிந்தனை
6 10 அறநெறி ஆரம்
6-25 நிகழ்ச்சி முன்னேட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப் பாடல்
6-55 போதிமாதவனின் போதனைகள்
7-00 வயலின் - மஞ்சுளா திருநாவுக்கரசு
7-30 மாகாணச் செய்திகள்
7-35 இசையமுதம்
8-05 வாத்தியமஞ்சரி
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 காலை ஒலிபரப்பு முடிவு

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 திருவருள் நெறி
6-30 உரைச் சித்திரம் எழுத்தும்' வாழ்வும் பி. ராஜகோபால்

இரவு
7-00 இளஞ்சுடர்
7-30 உலகச் செய்திகள்
7-40 நாட்டுப்பாடல் திருமணம்
7-45 சங்கீதாமிர்தம் (மறு ஒலிபரப்பு) ரி. வி. பிச்சையப்பா- சோமசிறி இளையங்கா
8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் பக்திப்பாடல்
9-30 நாதஸ்வரம்- ஷேக் சின்னமௌலானு
10-30 மெல்லிசைப் பாடல்
11-00 ஒலிபரப்பு முடிவு

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)
யாழ்.பல்கலைக்கழகஉயிரியல் இராசாயனத்துறைப் பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியம் உயிரியல் தொழில் நுட்பம் மூலம் கைத்தொழில் அபிவிருத்தி எனும் தலைப்பில் சொற்பொழிவாற்ற விருக்கின்றார்.

றோட்டரிக்கழக ஆதரவில் நடைபெறும் இந்நிகழ்ச்சி நல்லூர் குறுக்கு வீதியில் 'லக்னவாசர்' இல்லத்தில் இம்மாதம் 30ம் திகதி இடம் பெறும். (பெ)


ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
என் தம்பி

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
கமலஹாசன்-சுஜாதா
உயர்ந்தவர்கள்

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
Michael Cane
David Warner in
THE ISLAND
action packed
adults only

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்.-லதா
நம்பியார்
பல்லாண்டு வாழ்க
(புத்தம் புதிய பிரதி-கலர்)

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ரவிச்சந்திரன் ராஜஸ்ரீ
உத்தரவின்றி உள்ளே வா

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணம்மா
மனோகரா
(புதிய பிரதி)

றீகல் [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30, 6-30
Rex Harrison..
Darmendra...
Zeenath Aman..
in
SHALIMAR
Action-Packed-
English Movie

வின்சர் (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-00, 4-30
Gold Runner
Action—Thrill

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30,, 2-30 6-30.
யாருக்காக அழுதான்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெமினி-சரோஜாதேவி
நாகேஷ்
தாமரைநெஞ்சம்
[புதிய பிரதி]


## ஆஸி. மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதி

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை சுகாதாரப் போதனாசிரியை திருமதி தனலெட்சுமி துரைசிங்கம் அவுஸ்திரேலியா சென்றுள்ளார்.

மருத்துவத்தாதிகளின் இருபதாவது சர்வதேச மகாநாட்டில் ஒரே இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளும் இவரை இலங்கைத் தாதிமார்சங்கம் தெரிவுசெய்து அனுப்பிவைத்தது குறிப்பிடத் தக்கது.

சர்வதேச மகாநாடு நாளை முதல் அடுத்தமாதம் ஏழாம் திகதிவரை சிட்னியில் நடைபெறுகிறது.

''இலங்கையின் மருத்துவத் தாதிகளின் தொழில் வளர்ச்சி, சேவைமாற்றங்கள் புதிய தேவைகள்'' எனும் விஷயமாக இவர் கருத்துரை வழங்குவார்.

லண்டனிலுள்ள ரோயல் கொலிஜ் ஓவ் நேர்ஸிங்கில் டிப்ளோமா பட்டம் பெற்ற இவர் காலஞ்சென்ற இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. துரைசிங்கத்தின் துணைவியாவார். அவுஸ்திரேலியாவில் குடும்ப, சமூகசுகாதார சேவைகளையும் இவர் பார்வையிடுவார்.

## அரசுக்கு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்துகம எம்.பி இன்னமும் இந்தியாவுக்குப் பந்தம் பிடித்துக் கொண்டே இருக்கிறார் இந்தியாவின் கைப்பொம்மையாகவே அவர் தொடர்ந்தும் இருக்கப்பார்க்கிறார் என்று குற்றம் சாட்டினார்.

பந்தம் பிடிப்பது எனது தொழில் அல்ல நாம் படிப்படியாகவே செல்லவேண்டும் என்றும் அனில் கூற—

ஆம்... ஆம்... அவர்களும் (இந்தியா) படிப்படியாகவே எம்மை ஆக்கிரமிப்பார்கள் என்றார் பிரதமர்.

நாட்டைப் பிரிப்பதற்கும், பயங்கரவாதிகளுக்கும் சுதந்திரக்கட்சியினர் ஆதரவாக இருக்கின்றனர் என்பது விவசாயத்துறை அமைச்சரின் குற்றச்சாட்டு.

ஹலீம் இஷாக் தமது உரையில் இதனை மறுத்ததுடன், அரசின்மீது பல குற்றச்சாட்டுகளையும் சுமத்தினார்.

இந்தியப் பிரதமரைச் சாடுகிறார் சுதேச வைத்தியத்துறை அமைச்சர்:-

இலங்கைக்கு முதலில் வந்தவர்கள் தமிழர்களே சிங்களவர்கள் ஒரிஸ்ஸாவிலிருந்து பின்னர் வந்து குடியேறியவர்கள் என இந்திரா கூறியிருக்கிறார்.

ஆனால் கலைக்களஞ்சியம் என்ன கூறுகிறது முதலில் 5-ம் நூற்றாண்டில் சிங்களர்களும், இந்து ஆரியர்கள் கிறிஸ்துவுக்குப் பின் 1200-ம் ஆண்டில் தமிழர்களும் (திராவிடர்) இலங்கைக்கு வந்தனர் என்றும் கூறுகிறது.

சரித்திரம் தெரியாவிடின் இந்திரா கலைக்களஞ்சியத்தை ஏற்றுக்கொள்வார் எனத் தாம் நம்புவதாகவும் கூறிய சுதேச வைத்திய அமைச்சர் மேலும் கூறுகிறார்.

இந்தியாவிலிருந்து பின்னர் வந்த தமிழர்கள் வடக்கு, கிழக்கில் ஏற்கனவேவந்து குடியேறியசிங்களவர்களை விரட்டிவிட்டு அங்கு குடியேறினார்கள் என ஆராய்ச்சியாளர் பரணவிதாண தமது ஆராய்ச்சியில் கண்டுபிடித்து எழுதியுள்ளார். இந்திராவின் தந்தை அமரர் நேரு தாம் சிறையிலிருந்த போது, அனுராதபுரத்திலிருக்கும் புத்தர் சிலைப் படம் தமக்கு மன அமைதியைத் தந்ததாகவும், இந்துக்கோவில் சிலைகள் தம்மை அச்சத்துக்குள்ளாக்கியுள்ளதாகவும் தாம் எழுதிய புத்தகத்தில் தெரிவிக்கின்றார். இக்கூற்றுக்கள் மூலம் எமது பெருமையை ஏனையோர் அறிந்து கொள்ளலாம்.

ஜனாப் ஹலீம் இஷாக் மன்னார் அசம்பாவிதம் குறித்த விவகாரத்தை எழுப்பியபோது மன்னார், அடம்பன், முருங்கன் ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறினார்.

முஸ்லீம் மக்கள் என்றுமே நாட்டுக்கு விசுவாசமாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு விரோதமாக அரசு எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாது என்று தமது பதில் உரையில் கூறிய பிரதமர் மத்துகம எம். பி. யின் தேசியப்பற்றில் தான் சிறிது சந்தேகமாக உள்ளது என்று கூறினார்.

## 27 வருட சேவையின்பின் ஓய்வு

துன்னாலை வடக்கு, கோவிற்கடவை கரவெட்டியைச் சேர்ந்த இராமநாதன் மயில்வாகனம் 27 வருட கால பொலிஸ் சேவையின் பின் ஓய்வுபெற்றார். திரு. மயில்வாகனம் தமது பாடசாலை நாட்களிலும், பொலிஸ் பயிற்சி கல்லூரியில் இருந்த நாட்களிலும் விளையாட்டுத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டு பல சாதனைகளை நிலைநாட்டியவர் இவர் நுவரெலியா' மஸ்கெலியா, காலி, மாகோ, ஊர்காவற்றுறை போன்ற பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றினார். கடமை நேரங்கள் தவிர்ந்த வேளைகளில் தமது பொழுதை சமய, சமூக சேவைகளில் ஈடுபடுவதன் மூலம் செலவு செய்தார். கடந்த சில வருடங்களாக யாழ். பொலிஸ் இலாகாவில்டி ஐ. பி. என்று அழைக்கப்படும் விசேட பிரிவில் கடமையாற்றியவர். கட்டைவேலி ஞானசாரியாக் கல்லூரியின் பழைய மாணவர் இவர்.

தேவநேசன்

## நல்லூர்....

(2ம பக்கத் தொடர்ச்சி)

பெரும் பந்தல்களும் அமைக்கப்படவில்லை தண்ணீர்பந்தல்களும் குறைவாக காணப்பட்டது.

பக்தர்கள் வசதியாக நின்று, உற்சவங்களை பார்க்க கூடியதாயிருந்தது. உற்சவம் முடிந்ததும், மக்கள் கோவில்பகுதியில் தங்கியிருக்காமல், தேவையான சாமான்களை கடைப்பகுதிகளில் வாங்கிக்கொண்டு அவசரமவசரமாக வீடுநோக்கி சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

இம்முறை வடமராட்சி, தென்மராட்சி, மற்றும், தூர இடங்களிலிருந்து மக்கள் கோவிலுக்கு வழக்கத்திலும் பார்க்க குறைவாகவே வந்திருந்தனர்.

தூர இடங்களிலிருந்து வரும் காவடிகள், பஜனைகோஷ்டிகளையும் இம்முறைகாணமுடியவில்லை. பறவைக்காவடிகளும், இம்முறை காணப்படவில்லை.

வழக்கம்போல், அன்னதானம் வழங்கும்மடங்கள், வீடுகளில், அன்னதானம் வழங்கப்பட்டபோதிலும், கூட்டம் குறைவாகக் காணப்பட்டது.

வீதிகளில் இம்முறைகடைகளும் மிககுறைவாகவேகாணப்பட்டன. கடைகளில் விளையாட்டுத் துப்பாக்கிகளும், ''வாட்டர் பிஸ்ரல்'' களுமே அதிகம் விற்பனையாகின. சிறுவர்கள் அடம்பிடித்து அவற்றையே விரும்பிவாங்கியதை காணக்கூடியதாயிருந்தது.

தீர்த்தக்கேணியில் ஏற்பட்ட ஜனநெரிசலை தவிர்க்க அடுத்த வருடஉற்சவத்தின் போது மாற்றுஒழுங்குகள் செய்வார்கள் எனப்பக்தர்கள் சிலர் பேசிக்கொண்டார்கள்.

''கோவிலுக்கும், தீர்த்த கேணிக்கும், நடுவில்உள்ள பொதுமராமத்து வீதியை, கோவிலுக்குரியதாக்க தற்போது முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. முருகன் அருளால் இதுகைகூடுமானால், அடுத்த உற்சவத்தின் போது தீர்த்தகேணி பகுதி திருத்தியமைக்கப்படலாம் என்று பெரியவர் ஒருவர், அடியார்கள் சிலருக்கு விளக்கமளித்தார்.

வருடாந்த உற்சவம், எவ்வித பாதிப்புமின்றி நடந்துவிட்டமனத்திருப்தி பக்தர்கள் ஒவ்வொருவர் மத்தியிலும், காணப்பட்டது.

(க)

## இந்தப்பகுதியில் சுகாதாரக் குழுக்கள் அங்குரார்ப்பணம்

(பண்டத்தரிப்பு)
சங்கானை பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் ஆரம்ப சுகாதார கவனிப்புத் திட்டத்தின்கீழ் சங்கானை கிழக்கிலும் சங்கானை மேற்கிலும் இரு சுகாதாரக் குழுக்கள் கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சங்கானை மேற்குப் பகுதியிலுள்ள பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் யாழ். சுகாதார போதனாசிரியர் திரு. கா.வைத்தீஸ்வரன், சங்கானை பொது சுகாதார பரிசோதகர் திரு. ஏ. ஏ, ஜோன், சுகாதார மருத்துவத்தாதி திருமதி கே. சண்முகராசா, குடும்ப நல சேவையாளர் திருமதி சிவபாக்கியம் சற்குணசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு ஆரம்ப சுகாதார கவனிப்பு திட்டம் பற்றியும் சுகாதார குழுக்கள் தமது பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற் திட்டங்கள் குறித்தும் விபரமாக எடுத்துக் கூறினர்.

சங்கானை மேற்கு சுகாதாரக் குழு நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவ செய்யப்பட்டனர். தலைவர்: சட்டத்தரணி பொ. சிவபாலன், இணைச் செயலாளர்: திரு. சி. தயாபரசிவம், திருமதி சிவா சற்குணசிங்கம், பொருளார்: செல்வி இ. இராசமலர்.

செயற்குழு உறுப்பினர்களாக வட்டார ரீதியாக ஒன்பதுபேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## கிளிநொச்சியில் மாவட்ட அலுவலகம்

(கொழும்புத்துறை)
கிளிநொச்சி தனிமாவட்டமாகியதைத் தொடர்ந்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட அலுவலகம் கிளிநொச்சியில் நிறுவப்பட்டுள்ளது.

இம்மாவட்ட அலுவலகம் அடுத்தமாதம் திறத்துவைக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இத்தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் யாழ். மாவட்ட தேசிய வீடமைப்புத் அபிவிருத்தி அதிகார சபையே கிளிநொச்சிப் பகுதி வீடமைப்புத் திட்ட வேலைகளையும் கவனித்து வந்தது. கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்திற்கு யாழ், மாவட்ட மேல்திக முகாமையாளர் திரு. ரி, பி, முருகையா பொறுப்பாக இருப்பார்.

## வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை!

[பண்டத்தரிப்பு]
''வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை'' என்ற தலைப்பிடப்பட்ட சுவரொட்டிகள்பண்டத்தரிப்பில் முக்கிய இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

தற்போதய சூழ்நிலையில் பொருட்களை பதுக்கி வைப்பது கூடிய விலைக்கு விற்பது ஆகிய சமூக விரோதச் செயல்களை அறவே இல்லாது செய்யவேண்டும் என்றும் இதனை மீறுவோர்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜன நலன் காக்கும் பிரிவு இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சரோஜினி கொலை வழக்கு எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)
கிளிநொச்சி சரோஜினி கொலை வழக்கில் ஜூரி சபையினர் எதிரியை சுற்றவாளி என ஏகமனதாக தீர்ப்பளித்ததையடுத்து எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ் வழக்கு கடந்த மூன்று நாட்களாக தமிழ்பேசும்ஜூரி சபையினர் முன்னிலையில்யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே ஜி.ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. அரச தரப்பில் அரச சட்டத்தரணி கே.சிறிஸ்கந்தராஜா வழக்கைநடத்தினர்.

எதிரி தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆர்.பி.சபாரட்ணம் சட்டத்தரணி ரி.லிங்கராஜா, ரி.தனராஜசிங்கம், கே.அரியநாயகம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர்.

இந்த வழக்கில் அரச தரப்பில் வைத்திய கலாநிதி கைலாசபிள்ளை சிறீரஞ்சன், குழந்தையன் முத்து' தம்பு செல்லத்துரை, முத்து சின்னம்மா, மொகிதீன், செல்லம்மா ஆகியோர் சாட்சியமளித்தனர் இதில் முக்கியமாக எதிரியின்மனைவியாகிய மொகிதீன் செல்லம்மாவை எதிரிக்கு எதிராக சாட்சியமளிப்பதற்கு அரச தரப்பினர் அழைத்திருந்தனர். இவ் வழக்கில் கிளிநொச்சி கனகாம்பிகையைச் சேர்ந்த மொகமது மொகிதீன் என்பவர் 1977ம்ஆண்டு ஜூன் 26ம் திகதி அவரது சொந்த ஐந்து வயது மகளாகிய சரோஜினியைக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. (மா)

# அச்சுவேலி தபாலகம் நாளைமுதல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்டிருந்த அச்சுவேலி தபால் நிலையம், நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் சேவையாற்றத் தொடங்கும் என்று தலைமையகத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சகல பகுதிகளுடனும் தொடர்பு கொள்ளக் கூடியதான வசதியுள்ளதொலைபேசியும் இங்கு இணைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேற்படி தபால்நிலையம்சேதத்துக்குள்ளான போது காணாமல் போன பெறுமதி வாய்ந்த முத்திரைகள், ரொக்கப்பணம் சம்பந்தமான விசாரணைகளை நடத்துவதற்கு கொழும் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. பிலுள்ள தபால் தலைமையகத்தின் பொறுப்பதிகாரி ஒருவர்

## பூனைக்குப் பிறந்த கீரிக்குட்டி!

(வவனியா)

செட்டிகுளத்தில் உள்ள ஓர் வீட்டில் அதிசய சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது!

பூனைக்கு கீரிக்குட்டி பிறந்திருக்கிறது!

மூன்று பூனைக்குட்டிகளையும் ஒரு கீரிக்குட்டியையும் வீட்டுப் பூனையொன்று ஈன்றெடுத்துள்ளது!

கீரிக்குட்டி நல்ல சுகத்துடன் 'தாயி'டம் பால் குடிப்பதாக வீட்டுச் சொந்தக்காரர்கள் தெரிவித்தனர்.

மக்கள் இதனைச் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

## தமிழர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தும் டாக்டர் நீலன் குழுவினர் விளக்கமளித்ததாகக் கூறப்படுகிறது. மன்னார், யாழ்ப்பாணம், சுன்னுகம் சம்பவங்கள் குறித்தும் அவர் விளக்கமளித்தார்.

இக்குழுவினர் சுவீடனின் உதவியுடன் நடைபெறும் கொத்மலைத் திட்டத்தைப் பார்வையிடவும், மேலும் 5வருடங்களுக்கு இலங்கைக்கு உதவி வழங்குவது குறித்து ஆராய்வதற்காகவுமே இங்கு வந்துள்ளனர்.

## பொலிசாரினுல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எலும்புத் துண்டுகள் தொடர்பான விசாரணையில் சாட்சியமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ் நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் நேற்று விசாரணை நடைபெற்றது.

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க நலன்கருதி சட்டத்தரணி இ.விசுவநாதன் ஆஜராகியிருந்தார்.

யாழ்.பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் முத்துத்தம்பி மேற்படி வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

யாழ். மேலதிக சட்டவைத்தியஅதிகாரி என்.சரவணபவானந்தன் மேலும் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

''யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதியின் பணிப்பின் பிரகாரம் யாழ் பொலிசாரினுல் இரு பகுதிகளாக சில எலும்புகள் எனது சோதனைக்காக அனுப்பப்பட்டன.

முதலாம் பகுதி 24-7-84லும் 2ம் பகுதி 1-8-84லும் அனுப்பப்பட்டன. அவற்றை நான் பரிசோதனை செய்தபொழுது அந்த எலும்புகள் மனித எலும்புகள்தான் என்று நிச்சயமாகக் கூறமுடிந்தது. அத்துடன் அவ்வெலும்புகள் 30—40 வயதுக்கிடையில் மதிக்கத்தக்க ஓர் ஆணின் எலும்பு என்றும் தோன்றியது.

''இறந்தவர் சுமார் 5 அடி மூன்றரை அங்குல உயரமுடையவராக இருந்திருக்கலாம். எலும்புகள் காணப்பட்ட சில பகுதிகள் ஒன்றுடன் ஒன்று பொருந்தக்கூடிய நிலையில் இருந்தன. பொருந்தாத பகுதிகள் இறந்தவருக்குச் சொந்தமானதாக இருக்கலாம். அல்லது வேறு ஒருவருடையதாகஇருக்கலாம்.

''எலும்புகள் எல்லாம் கடும் சூட்டுக்குள்ளாகியிருந்தது. சம்பந்தப்பட்டவருக்கு மரணம் நான் பரிசோதனை செய்த நாளிலிருந்து ஈன்கு மாதத்துக்குமுன் ஏற்பட்டிருக்கலாம். நான் சென்ற வாரம் முழுவதும் இவ்வெலும்புகளைப் பரிசோதனை செய்தேன்''

சங்க செயலாளர் திரு ஞானசுந்தரம் ஸ்ரீ மனோகரன் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

''9-4-84 அன்று ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கட்டிடம் தீயினுல் சேதப்படுத்தப்பட்டது. அக்கட்டிடத்தின் இடிபாடுகளை அகற்றுவதற்காக சங்கத்தினர், வி. வெற்றிவேலு வீடமைப்புக் கட்டிட ஸ்தாபனத்தாரை நியமித்தனர். ஸ்தலத்தில் சிங்கம் என்பவர் இடிபாடுகளை அகற்றுவதற்கு மேற்பார்வையாளராக இருந்தார்.

24-7-84ல் இடிபாடுகளை அகற்றும்பொழுது அந்த இடிபாடுகளுக்குள் சில எலும்புகள் காணப்பட்டதாகச் சிங்கம்என்பவர் கூறினுர். நான் உடனே யாழ். பொலிசாருக்குத் தகவல் கொடுத்தேன். பொலிசார் ஸ்தலத்துக்கு வந்து அங்கு காணப்பட்ட சில எலும்புகளைப் பொறுப்பேற்றனர். அத்தருணம் நானும் சமுகமாயிருந்தேன். இடிபாடுகள் இத்தினத்திற்கு முன்னரும் அகற்றப்பட்டு உரும்பராயில் கொண்டு சென்று போடப்பட்டது. அந்த இடிபாடுகளுடன் சில எலும்புகளும் அகற்றப்பட்டிருக்கலாம் என்று எனக்குத் தோன்றியதால் சங்கத் தலைவர் வைத்தியர் வே. யோகநாதனுடன் 28-7-84ல் உரும்பராய்க்குச் சென்று இடிபாடுகள் போடப்பட்ட இடத்தில் சோதனை செய்தோம். அங்கும் சில எலும்புகள் கண்டெடுக்கப்பட்டன. அவ்வெலும்புகளும் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டன. அத்தருணம் உரும்பராய்கிராமசேவையாளரும் சமுகமாயிருந்தார். என்றுர்.

விசாரணையின் பின்னர் நீதவான் தீர்ப்பு வழங்குவதை செப்டம்பர் 3ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (மா)

## தமிழ் இளைஞர் ..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டு தற்போது காலி 'பூசா' தடைமுகாமில் விசரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு அன்னையர் முன்னணி யாழ். செயலகத்திற்கு ஊர்வலமாகச் சென்று தன்னிடம் கையளித்த மகஜர்பற்றி இவர்கள் இருவரும் நீண்டநேரம் உரையாடினர். இவ்வுரையாடலின்போது பந்தோபஸ்து அமைச்சரின் ஏற்பாட்டின்படி உள்நாட்டு விவகார அமைச்சர் கே. டபிள்யூ தேவநாயகம், பிரதேச அபிவிருத்தி அமைச்சர் செ. இராஜதுரை, யாழ்.மாவட்ட அமைச்சரும், தம்பதெனிய பாராளுமன்றஉறுப்பினருமான யூ.பி. விஜேகோன். பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் சேபால ஆட்டிக்கல ஆகியோரும் உடனிருந்தனர்.

அரசாங்க அதிபர், வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினர் தனக்கு வல்வெட்டித்துறையில் கைதுசெய்யப்பட்டவர்களென அளித்த பெயர்ப் பட்டியல் விபரங்களையும், இம் மாதம் 25ம் திகதிவரை தம்மால் யாழ். ரயில் நிலையத்தில் கையேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட ஆட்களின் தொகையையும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

அன்னையர் முன்னணியினர் தமிழ் மொழியில் அளித்த மகஜரின் ஆங்கில மொழி பெயர்ப்பை அமைச்சர் மிக ஆழ்ந்த கவனத்தோடு வாசித்தார். அன்னையர் முன்னணியினர் ஊர்வல புகைப்படங்களையும் அரசாங்க அதிபர் காட்டி அன்னையரின் அவலநிலையை விளக்கினுர்.

'பூசா' இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, அச்சுவேலி, இடைக்காடு, சுன்னுகம், தீவுப்பகுதி, யாழ்ப்பாணம், அளவெட்டி போன்ற இடங்களைச் சேர்ந்த இளைஞர்கள், கைதானோரில் பலர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், மிகுதியானோர் கூடியசீக்கிரம்விசாரணைசெய்யப்பட்டுவிடுவிக்கப்படுவரெனவும் அமைச்சர் லலித் உறுதி கூறினுர். இதையிட்டு தொடர்ந்து விளக்கிய அமைச்சர், இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டவர்களில் பலர் நிரபராதிகளாகக் காணப்பட்டு விடுதலை செய்யப்படுவதாகவும், அந்நிலை தடுக்கமுடியாததொன்று என்றும் விசாரணையின் பின் விடுவிக்கப்படுபவர்கட்கு ஒரு அத்தாட்சிப் பத்திரம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும், மீண்டும் இவர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டால் இப்பத்திரத்தைப்பெறுபவர்கட்கு மிகவும் உதவியாக இருக்கும் என்றும் கூறினுர்.

தடுப்புக்காவலில் இருக்கும் நபர்களை அரசாங்க அதிபர் நேரில் பார்த்து அவர்கட்கு கொடுபட்டுள்ள உணவு, உடை, இருப்பிட வசதிகளை அவர்கள்வாயிலாகவே அறிந்து கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

யாழ் மாவட்ட அமைச்சரும் அரசாங்க அதிபரும் காலி 'பூசா' தடுப்பு முகாமுக்குச் சென்று இங்குள்ள இளைஞர்களை நேரடியாகப் பார்த்தனர் இளைஞர்கள் வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்ற ஆவலுடன் இருப்பதை விட தங்கட்கு அளிக்கப்பட்டுள்ள உணவு, உடை, படுக்கை, நீர் வசதிகள் அனைத்தும்திருப்திகரமானவை என தங்கள்மனம்திறந்துபேசினர்.

இதைத் தொடர்ந்து மாவட்ட அமைச்சரும் அரசாங்க அதிபரும் முகாம் அதிகாரியைச் சந்தித்து தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் பட்டியலையும் விடுதலை செய்யபபட்டவர்களின் எண்ணிக்கையையும் சரிபார்த்தபோது கைது செய்யப்பட்டு 'பூசா' தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த 348 பேர்களில் 26-8-84 வரை 139 பேர் விடுதலையாகினர் எனவும் மிகுதி 209 இல் 18 பேர் 29-08-84 இல் விடுதலையாகினர் எனவும் தெரியப்படுத்தினர் மாவட்ட அமைச்சர் இராணுவ முகாம் அதிகாரியுடன் கலந்தாலோசித்து, விசாரணை பூரணமாகும் வரை தடுப்புக் காவலில் இருப்போர் தத்தம் பெற்ரோருடன் கடித மூலம் தொடர்பு கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம் திரும்பியதும், முகாம்அதிகாரியுடன் தொடர்பு கொண்ட போது இக் கடிதங்கள் சில இன்று வியாழக்கிழமை வருமென எதிர்பார்க்கப்படுகிறது

யாழ் அரசாங்க அதிபர் கௌரவ அமைச்சரைச் சந்தித்ததன் பயனுக முன்னர் அமுலில் இருந்த 48 மணித்தியாலங்களுள் இராணுவப் படையினரால் கைது செய்யப்பட்டவர்களின் பட்டியல் அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்படும் எனவும் உறுதி அளிக்கப்பட்டது. (மா)

## இளைஞர் சடலம் கண்டுபிடிப்பு

(கிளிநொச்சி)

இரணைமடுக்குளக்கட்டில் 25 வயதுடைய இளைஞரின் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது!

இறந்துகிடந்தவரின் ஷேர்ட் பாக்கட்டில் இருந்த அடையாள அட்டையில் 'பொன்னையா நவரத்தினம் வேலணை கிழக்கு' என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இவரது நெஞ்சில் துப்பாக்கிச் சூட்டுக்காயம் இருந்ததாக கிளிநொச்சி ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது. ஆஸ்பத்திரி பிரேத அறையில் அடையாளம் காண்பதற்காக சடலம் வைக்கப்பட்டுள்ளது. (மா)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அத்தியடிப் பிள்ளையார் கோவில் விநாயக சதுர்த்தி உற்சவம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

பகல் ஸ்நபனுபிஷேகமும் மாலை 6 மணிக்கு உற்சவமும் நடைபெற்று எம்பெருமான் வெளி வீதி வலம் வருதலும் இடம்பெறும்.

மணவாளக்கோல உற்சவம் நாளை மாலை 6 மணிக்கு நடைபெற்று திருவூஞ்சலும் வெளிவீதிவலம் வருதலும் இடம்பெறும்.

## சர்வகட்சிமாநாடு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான நிபுணர்கள் குழுவின் அறிக்கை விரிவாக ஆராயப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, மஹா சங்கம், முஸ்லிம் லீக், பௌத்த காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ். முஸ்லிம் கவுன்சில் என்பன தமது ஆலோசனைகளை சமர்ப்பித்தன.

மாநாடு மீண்டும் சனி, ஞாயிறு கிழமைகளில் காலை 5-30 மணிக்கு கூடும்.

## சுவிஷ் தமிழ் இளைஞர்-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது என்று தமது அறிக்கையில் தெரிவித்துள்ள இவர்கள் அரசியல் தீர்வு காணப்பட வேண்டியது தவிர்க்க முடியாதது என்றுதெரிவித்துள்ளனர்.

## மாணவர் தாக்கப்பட்டதற்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான, உயர் வகுப்புகளைக் கொண்ட சில கல்லூரி மாணவர்கள் பாதுகாப்பு வேண்டி நேற்று பிற்பகலிலிருந்து வகுப்புக்களைப் பகிஷ்கரித்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

இப்பகிஷ்கரிப்பு சம்பந்தமாக ஒரு கல்லூரியில் உயர்தர மாணவர்கள் ''மாணவர் பாதுகாப்பு வேண்டி பகிஷ்கரிப்பு'' என்ற துண்டுப்பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

சக மாணவர் ஒருவர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு தாக்கப்பட்டதைக் கண்டித்தே பகிஷ்கரிப்பு செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

## நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் சட்டவிரோதமானமுறையில் குடியேறியவர்கள் நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து கிராம சேவை அதிகாரிகளினுல் வெளியேற்றும் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

கல்லடிப் பகுதியில் குடியேறியவர்களை நீதிமன்றம் வெளியேறும்படி உத்தர விட்டபோதிலும் ஒரு சாரார் வெளியேறவில்லை இதனையடுத்து இவர்களது இருப்பிடங்கள் அகற்றப்பட்டு குடியேறியவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

## நீதிமன்ற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றதாம்.

இனந்தெரியாத 8 பேர் கொண்ட கோஷ்டியினர் வானென்றில் வந்து நீதிமன்றக் காவலாளியை துப்பாக்கி முனையில் தடுத்து வைத்துக் கொள்ளை அடித்ததாகவும், பின்னர் காவலாளியை தாங்கள் சென்ற வானிலேயே ஏற்றிக்கொண்டு முறிகண்டியில் இறக்கிவிட்டுச் சென்றுவிட்டதாகவும் கிளிநொச்சிப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)

## குருநகர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமது வேலைகளை ஆரம்பிக்கிறது.

யாழ் பிரதான வீதியிலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் திருத்த வேலைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதால், விரைவில் தமது அலுவல்களை இது தொடங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## கரணவாய்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

தாக்குதலுக்குப் பயந்து பீதியினுல் கரணவாய் தெற்கிலிருந்து இரண்டாயிரத்திற்கு மேற்பட்டோர் நவிண்டில் குளங்கரை, வதிரி, கரவெட்டி போன்ற இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றிருந்தனர்.

கரணவாய் தெற்கு, வெற்றியகாடு, முள்ளிப் பகுதிகளில் 15 க்கு மேற்பட்ட வீடுகள் தீயிடப்பட்டுள்ளன. பாதுகாப்புப் படையினர் வெடிகுண்டுச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களைத் தேடிக் கிராமப் பகுதி ஒழுங்கைகளுக்குள் தேடுதல் நடத்தத் தொடங்கியபோதே இக்கிராம மக்கள் உடுத்திருந்த உடுப்புகளுடன் ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக அயல்கிராமங்களை நோக்கி ஓட்டம்பிடித்தனர். இவர்களுக்கு அயல் கிராமங்களில் உள்ளவர்கள் தஞ்சமளித்து உணவு, தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்திருந்தனர். இரண்டு தினங்களாகக் கரணவாய் தெற்கு வெறிச்சோடிக் கிடக்கக் காணப்பட்டது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126